# ஐக்கிய மேதினத்தை நோக்கி முன்செல்வோம்

## முற்போக்குசக்திகளை ஒன்று திரட்டுவோம்


# தொழிலாளி

இலங்கைத் தொழிலாளி வர்க்கத்தின் ஒரே வார இதழ்

மலர் 2 | இதழ் 29 | மார்ச் 28, 1964 | பக்கங்கள் 8 | விலை சதம் 10


**இருபத்தொரு கோரிக்கைகளுக்காதரவாக கடந்த சனிக்கிழமை நடந்த வெற்றிகர பொதுக்கூட்டத்தின்பின் மேலும்சிறந்த வெற்றிகர ஐக்கிய மே தினத்தை முழுத் தொழிற் சங்க, தொழிலாள வர்க்க இயக்கமும் எதிர்பார்க்கின்றது.**


இடதுசாரி ஐக்கிய முன்னணி, கூட்டுத் தொழிற்சங்கக் கமிட்டி ஆகியவற்றின் கூட்டுத் தலைமையில் ஐக்கிய மேதினம் கொண்டாடுதல் வேண்டுமென்று கூட்டுத் தொழிற்சங்கக் கமிட்டியின் முன்னால் தற்பொழுதுள்ள பிரேரணையை ஏற்றுக்கொள்வதன் மூலமேஇதனை அடைய முடியும்.

இவ்விரு ஸ்தாபனங்களினதும் கூட்டு முயற்சியினாலேயே எமது நாட்டுத் தொழிலாள வர்க்க முற்போக்குச் சக்திகளைப் பூரணமாக ஒன்றுதிரட்டமுடியும். நாட்டில் இன்றிருக்கும் அரசியல் சூழ்நிலையிலும், 21 கோரிக்கைகளுக்கான போராட்டத்திற்கு முழுத் தொழிற்சங்க இயக்கத்தையும் ஸ்தாபனரீதியாகத் திரட்டுவதின் அவசியத்தின் காரணமாகவும் சகல முற்போக்கு சக்திகளினதும் கூடுதலான ஐக்கியத்தைக் காண்பது மிகவும் முக்கியமானது.

இந்தச் சூழ்நிலையில், குறுகிய கட்சிநலன்களுக்காகவும் செக்டேரியன் நோக்கங்களுக்காகவும், ஏதோ காரணங்களுக்காக அரசியலில் தமக்கு விருப்பமற்ற தொழிலாள வர்க்க இயக்கத்தின் பகுதிகளை ஒன்றுகூட்டாது, இடதுசாரி ஐக்கிய முன்னணியுடன் இணைந்திராத தொழிற்சங்கங்களைத் தவிர்த்துஇடதுசாரிஐக்கிய முன்னணி மேதினம் கொண்டாடுதல் வேண்டும் என்று இடதுசாரி இயக்கத்தில் எழும் செக்டேரியன் குரல்களை நாம் வன்மையாகக் கண்டித்தல் வேண்டும். இச் செக்டேரியன் சூழ்ச்சிகளின் நோக்கம் வெளிப்படையானது. சி.டி.யூ.எப். போன்ற புரட்சிகரத் தலைமையுடைய ஸ்தாபனங்களை நீக்குவதற்கான அருவருக்கத்தக்க முயற்சியே இது. இந்த ஸ்தாபனங்கள் ஐக்கியத்திற்கு விரோதமானவை என்ற பிரச்சாரத்தை நடத்திய திரிபுவாதிகளினதும் அவர்களின் இடதுசாரி இயக்கத்திலுள்ள நண்பர்களினதும் உண்மை உருவம் இன்று அம்பலமாகின்றது. சகல முற்போக்கு சக்திகளினதும் எதிரிகள் யார் என்ற உண்மை இப்பொழுது தெளிவாகின்றது.

இத்தகைய முரட்டு நடவடிக்கைகள் மூலம் இத்திரிபுவாதிகள் புரட்சிகரச் சக்திகளைத் தனிமைப்படுத்தலாம் எனக் கனவு காண்கின்றனர். புரட்சிகரச் சக்திகளல்ல, அவர்கள்தான் தனிமைப்படுத்தப் படுவார்கள் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுதல் வேண்டும் (முன்னர் தெரிந்திருக்காவிட்டால், கடந்த சனிக்கிழமை பொதுக்கூட்டத்தின்பின் அவர்கள் இப்பாடத்தைக் காற்றிருத்தல் வேண்டும்.)

21 கோரிக்கைகளுக்கான பொதுப் போராட்டத்திற்காக, பிற்போக்குச் சதிகள் அனைத்தையும் உடைத்தெறிவதற்காக, தொழிலாளி வர்க்க இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக, இவ்வருட மேதினத்தை செக்டேரியன் நோக்கங்களுக்காக குறுக்க முனையும் முயற்சிகளைத் தகர்த்தெறிதல் வேண்டும். இடதுசாரி ஐக்கிய முன்னணி, தொழிற்சங்கக்கூட்டுக்கமிட்டி ஆகியவற்றின் கூட்டுத்தலைமையில் ஒரு ஐக்கிய மேதினம் வேண்டும் எனக் கோரி சகல தொழிற்சங்கங்களும் முற்போக்கு ஸ்தாபனங்களும் போரிடுதல் வேண்டும்.



மார்ச் 21-ம் திகதி காலிமுக மைதானத்தில் நடைபெற்ற தொழிற்சங்கங்களின் மாபெரும் பொதுக்கூட்டத்தில் தோழர் சண்முகதாசன் வீர முழக்கம் செய்துகொண்டிருக்கின்றார். ஊர்வலம், பொதுக்கூட்டம் பற்றிய செய்திகள், விமர்சனத்திற்கு முறையே பக்கங்கள் 3, 4, 5, பார்க்கவும்.

### தலையங்கம்

## ஐக்கியத்தின் விரோதிகள்

இடதுசாரி ஐக்கிய முன்னணி வெறும் தேர்தல் முன்னணியாக அமைதல் கூடாது; கொள்கை அடிப்படையில் இணைந்த இறுக்கமான அமைப்பாகத் திகழுதல் வேண்டும் என்ற சரியான கருத்தை நாம் ஆரம்பத்திலேயே முன்வைத்தோம்.

சிந்தனையில் தெளிவும் நேர்மையுமற்ற சிலர் எம்மை ஐக்கிய விரோதிகள் என்று பட்டஞ் சூட்டி அவதூறுகள் எல்லாம் மொழிந்தனர். ஆனால் இன்று நடைமுறையில் நாம் காணக்கூடிய நிகழ்ச்சிகள் எமது கூற்றுக்களை நிரூபிக்கின்றன.

இடதுசாரி ஐக்கிய முன்னணி பற்றி வாய் கிழியக் கூச்சலிட்டு, தமது அரசியல் வாழ்வின் முடிவைத் தடுப்பதற்கு அதனைப் பாவிப்பவர்களைப் பொறுத்தவரை இடதுசாரி ஐக்கிய முன்னணி என்பது 'முப்பெருந் தலைவர்களின்' முன்னணியாகும். இதில் தான் எத்தனை முரண்பாடுகள்?

இவர்கள் முன்னணியின் தலைவராகத் தெரியப்படுவாரெனப் பத்திரிகைகள் கூறிய பிலிப் குணவர்த்தன அவர்கள் தனிக்காட்டு ராஜாவாகப் பவனி வருகிறார். அவருக்கு இடதுசாரி ஐக்கிய முன்னணி ஒன்று இருப்பது அக்கறையில்லை.

முன்னர் கம்யூனிஸ்ட் கட்சியையும், சமசமாஜக் கட்சியையும் அவை பண்டாரநாயக்கா காலத்தில் பின்பற்றிய கொள்கைக்காகக் கண்டித்தார். பின் வர்த்தக ஊழியர் சங்கத்தின் துறைமுக வேலை நிறுத்தத்தைக் கண்டித்தார். இன்று, இடந்தந்தால் சர்வாதிகாரம் நடாத்துவேன் என்கின்றார்.

திரு. பிலிப் குணவர்த்தனவின் இப் பொன்மொழிகள் பற்றி சமசமாஜக் கட்சித் தலைவர்களும், கம்யூனிஸ்ட் கட்சியின் பெயரால் இடதுசாரி ஐக்கிய முன்னணியில் ஆசனத்தை ஆக்கிரமித்துள்ள திரிபுவாதிகளும் என்ன நடவடிக்கை எடுத்தனர், அல்லது அவர்களும் இக் கூற்றுக்களுக்கு உடன்பாடானவர்களா?

நேற்றுத்தான் டாக்டர்கள் என். எம். பெரேராவும், கொல்வின் ஆர். டி. சில்வாவும் சர்வாதிகாரத்தை எதிர்த்து காலிமுக மைதானத்தில் கதறினர். ஆனால் அடுத்த நாள் பிலிப் தனிச் சர்வாதிகாரம்தான் செய்வேன் என்கின்றார்.

இது தானா ஐக்கிய முன்னணியின் இலட்சணம்? மக்களின் நல்வாழ்வுக்கு வழி வகுக்கும் ஐக்கிய முன்னணியை அநியாயமாக நாசமாக்கும் இத் துரோகத் தலைவர்களை மக்கள் பூரணமாக இனங்கண்டு கொள்ளும் காலம் விரைவில் வரும். அப் பொழுது இவர்கள் அரசியல் அந்தகாரத்தில் தூக்கி எறியப்படுவர் என்பது நிச்சயம்.

தொழிலாளி

# ஈழத்து தமிழ்மொழி வளர்ச்சிக்கு இந்திய பத்திரிகைகள் இடையூறு

## வகுப்புவாதம் கக்கும் இலங்கைப் பத்திரிகைகள்

## பத்திரிகை கமிஷன் முன் சாட்சியம்

தமிழ்ப் பத்திரிகைகளின் சில அம்சங்களையும் சம்பந்தப்பட்ட சில பிரச்சினைகளையும் சுட்டிக் காட்டுவதே எமது நோக்கம். இவை பற்றி அரசாங்கமோ பிற ஸ்தாபனங்களோ கவனம் செலுத்தி ஆராய்ந்துள்ளதாகத் தெரியவில்லை. இன்றுவரை பத்திரிகைக் கமிஷன் முன் சமர்ப்பிக்கப்பட்ட சாட்சியத்திலிருந்து இது புலனாகிறது. இதுவரை தமிழ்ப் பத்திரிகைகளின் எந்தப் பிரத்தியேக குணும்சத்தையும் எவரும் சுட்டிக் காட்டவில்லை.

ஆகவே தமிழ்ப் பத்திரிகைகளில் நிலவும் சில ஆபத்தான அம்சங்களைத் திருத்துவதற்கு உதவி செய்யுமுகமாக, எமது சங்கத்தின் சார்பில் நாம் பின் வருவனவற்றைச் சமர்ப்பிக்கிறோம்.

தமிழ் மொழி, கலாசாரம், இலக்கியம் ஆகியன சிங்கள மொழியுடன் ஒத்தியங்கும் ரீதியில் வளர்க்கப்பட வேண்டும். பத்திரிகைகள் தேசிய ஐக்கியத்தை வளர்க்கவேண்டும். எமது தாய் நாட்டிற்குத் தமது கடமையை உணர எமது மக்களுக்குப் பத்திரிகைகள் உதவவேண்டும். பத்திரிகைகள் இந் நாட்டிலுள்ள அனைவரையும் இலங்கையராக உணரவும் செயல்படவும் செய்ய வேண்டும் என்பதை நாம் வலியுறுத்திக் கூறவேண்டியதில்லை. எம் நாட்டின் சுயாதிபத்தியம் பாதுகாக்கப்பட இது மிக அவசியம்.

இலக்கியத் துறையில்கூட, இலங்கைத் தமிழிலக்கியம் வளர்க்கப்படவேண்டும்; இந்தியாவிலிருந்து கண்மூடித்தனமாகக் காப்பியடிக்கப்படக் கூடாது. அந்நிய மண்ணின்இலக்கியத்திலிருந்துநல்ல அம்சங்களை ஏற்பது ஒரு விஷயம்; ஆனால் அந்நிய இலக்கியத்தைத் தமதாக ஏற்றுக் கொள்ள மக்கள் மனங்களைப் பண்படுத்துவதோ நிச்சயமாகப் பிறிதொரு, அபாயகரமான விஷயம். பிரதானமாகப் பத்திரிகைகளின் செல்வாக்கின் விளைவாக இலங்கைத் தமிழர் மத்தியில் பரவியுள்ள இத்தகைய கருத்தை நாம் எதிர்க்கிறோம். எமது மொழியில் இந்த அந்நியப் பிடிப்பைத் தகர்ப்பதே எமது நோக்கம்.

எமது சாட்சியத்தை, இலங்கையிலுள்ள தமிழ்ப் பத்திரிகைகளின் நிலை, இலங்கையில் தென்னிந்திய இலக்கியத்தின் தாக்கம், தமிழ்ப் பத்திரிகையாளர்களின் வேலை நிலைமைகள், என மூன்று பகுதிகளாக சமர்ப்பிக்க விரும்புகிறோம்.

### 1. ஈழத்துப் பத்திரிகைகள்

இலங்கையில் தினகரன், வீரகேசரி, ஈழநாடு ஆகிய மூன்று தினசரிகளும், சுதந்திரன், செய்தி போன்ற வாரப் பத்திரிகைகளும், கதம்பம் போன்ற மாசிகைகளும் உள்ளன.

தினகரன், அதன் வகுப்புவாதம் நீங்கலாகப், பெரும்பாலும் டெய்லி நியூஸ், ஒப்சேவர் பத்திரிகைகளின் தழுவலே. இப் பத்திரிகைகளுக்கு வகுப்புவாதம் ஒரு வசதியான விலைச் சரக்கு. தினகரன் ஏரிவீட்டுப் பத்திரிகை. சிலுமின, ஜனதா, தினமின ஆகிய சிங்களப் பத்திரிகைகளும் அப்படியே. ஆனால் தினகரன் தமிழ் மக்களிடையே வகுப்புவாதத்தைப் பரப்புகையில் இச் சிங்கள இதழ்கள் சிங்கள இனவெறியைக் கக்குகின்றன.

இப் பத்திரிகைகளை மேலோட்டமாக நோக்கினாலும் இவை மக்கள் மத்தியில் எவ்வாறு வகுப்புவாதத்தைப் பரப்புகின்றன என்பதைக் காணலாம். இவ்விஷயத்தில் சுதந்திரனே மிக மோசமானது. அது இதழுக்கு இதழ் வகுப்புவாதத்தை தொடர்ந்து பிரச்சாரம் செய்கிறது.

### இந்திய முதலாளிகளின் பத்திரிகை வீரகேசரி

வீரகேசரி இந்தியர்களுக்குச் சொந்தமான பத்திரிகை. ஆகவே இந் நாட்டிலும் மக்களிலும் அதற்கு அக்கறையில்லை. இந்தப் பத்திரிகை இந்திய ஆதிக்கக் கருத்தை இந் நாட்டில் பரப்பவும், இந் நாட்டு மக்களின் மனங்களை இந்தியத் தலைமையை ஏற்கப் பண்படுத்தவும் முயல்கிறது. அது இலங்கையிலுள்ள இந்திய வர்த்தகர்களின் நலன்களைப் பிரதிநிதித்துவம் செய்கிறது.

இந்திய செல்வாக்கைப் பரப்புவதால் அது இலங்கைத் தமிழர்களின் தேசபக்தி, மொழி, இலக்கிய கலாச்சார அபிவிருத்தியை நசுக்குகிறது. அதே சமயம் இந்திய வம்சாவளியினரான தோட்டத் தொழிலாளர்களை இலங்கையின் ஏனைய மக்களிலிருந்தும், ஏனைய தமிழ் மக்களிலிருந்தும் கூட, தனிப்படுத்தி வைத்திருக்க முயல்கிறது. மண்ணோடும், மக்களோடும் இணைந்தன்றி ஒரு மொழியில் இலக்கியத்திற்கோ, கலாச்சாரத்திற்கோவளர்ச்சிஇல்லை. இலங்கைத் தமிழ் மக்களின் சுதேசிய இலக்கிய கலாச்சார வளர்ச்சிக்கு அது எதிராயுள்ளது. இவையெல்லாம் செய்யப்படுவது குறிப்பிட்ட கட்டுரைகள், செய்திகள் மூலம் மட்டுமோ அன்றி வெளிப்படையாகக் கருத்தைத் தெரிவிப்பதன் மூலமோ அல்ல. நாளாந்தம் பக்கத்துக்குப் பக்கம் செய்திகளில் இந்தியாவில் நடப்பவற்றிற்கு முக்கியத்துவம் தருவதும் இலங்கையிலுள்ள அதிமுக்கியமான செய்திகளை இரண்டாம் பட்சமாக்குவதும், இந்தியத் தலைவர்களையும் இந்தியாவில் நடப்பவற்றையும் இடையறாது ஏற்றிப் போற்றுவதும், இலங்கையின் அனைத்தையும் சிறுமைப் படுத்துவது போன்ற வழிகளால் இது செய்யப்படுகிறது.

வீரகேசரிதான் இலங்கையில் நீண்டகாலமாக ஒரே தமிழ்த் தினசரியாக இருந்தது என்பதையும், சமீப காலம் வரை இதுவே ஆகக் கூடிய விற்பனையுடையதாயிருந்தது என்பதையும் கொண்டு நோக்கையில் இவையனைத்தும் மிகப் பாரதூரமானவையாகின்றன.

தேசிய ஐக்கியத்தைக் காப்பதற்கு இப்பத்திரிக்கைகள் சரியான முறையிற் கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

> இலங்கைப் பத்திரிகையாளர் சங்கப்பிரதிநிதி குழு இம்மாதம் 23, 24, 25 ஆகிய திகதிகளில் பத்திரிகைக் கமிஷன் முன் சாட்சியமளித்தது.
>
> சங்கத் தலைவர் திரு ரத்ன தேசப்பிரிய சேனநாயக்கா செயலாளர் தர்மசிறீ ஜெயக்கொடி மற்றும் பலரைக் கொண்ட பிரதிநிதி குழு சாட்சியமளித்தது.
>
> தமிழ் பத்திரிகைகள் சம்பந்தமாக வீ. ஏ. கந்தசாமி க. குமாரலிங்கம் ஆகியோர் அளித்த சாட்சியம் கீழே கொடுக்கப்படுகின்றது.

தினகரனைத் தவிர ஏனைய பத்திரிகளின் ஆசிரியர்கள் இந்தியர்கள் அல்லது இலங்கையராகப் பதிவு செய்யப்பட்டவர்கள் ஆவர். வீரகேசரி, ஈழநாடு, சுதந்திரன், செய்தி அனைத்திலும் இப்படியே. இந்த நிலைமை எமது மொழியினதும், நாட்டினதும் அபிவிருத்திக்குச் சாதகமான தொன்றல்ல. அவர்களுக்கு அதுபற்றி அக்கறையேயில்லை. அவர்களின்சிந்தனையும் செயல்முறையும் எமது நாட்டிற்கு ஊறாயிருப்பதில் அதிசயமுமில்லை, வேறு எதையும் எதிர்பார்ப்பதற்குமில்லை.

மற்ற அம்சம், இப் பத்திரிகைகள் எமது நாட்டைப் பற்றிய உபயோகமான விஷயங்களுக்கு இடமளிப்பதில்லை. உதாரணமாக, தேசிய கைத்தொழில் அபிவிருத்தி பற்றி சிங்கள இதழ்களில் காணக் கிடைக்கும் தகவல்கள், அன்றி ஆங்கில இதழ்களில் வரும் சொற்ப தகவல்கள்தானும் இவற்றில் இடம்பெறுவது இல்லை. மக்கள் விரும்பக் கூடிய பிற நாளாந்த செய்திகளும் இடம் பெறுவதில்லை.

இப்பத்திரிகைகள் வகிக்கும் ஏகபோகம் காரணமாகப் புதிய பத்திரிகைகள் தோன்றுவது அசாத்தியமாகிறது. இப் பத்திரிகைகள் முதலாளித்துவ நிறுவனங்களிடமிருந்து பெறும் விளம்பரங்களோடு, அரசாங்க விளம்பரங்களும் அவற்றுக்கே தரப்படுகின்றன.

### 2. தென் இந்தியப் பத்திரிகைகளின் தாக்கம்

பத்திரிகைக் கமிஷன் தற்போது உள்நாட்டுப் பத்திரிகைகளின் அரசியல், பொருளாதார, கலாச்சார தாக்கத்தை விசாரணை செய்கிறது. ஆனால் தமிழ்ப் பத்திரிகைகளை வாசிக்கும் மக்களைப் பொறுத்த வரையில் ஒரு விசேஷ நிலைமை உள்ளது. உள்நாட்டுப் பத்திரிகைகளைக் காட்டிலும் அந்நிய பத்திரிகைகள், அதாவது தென் இந்தியப் பத்திரிகைகள், எமது மக்களின் சிந்தனைப் பாணியைப் பாதிக்கின்றன. அவை தென்னிந்தியப் படங்களுக்கு மட்டுமே அடுத்தபடியானவை. இந்த அம்சம் மிகப் பொறுப்பாக ஆராயப்பட வேண்டும்.

### 74 பத்திரிகைகள் இறக்குமதி

சுமார் 74 இந்தியப் பத்திரிகைளும் சஞ்சிகைகளும் இங்கு இறக்குமதியாகின்றன. இவற்றில் சில நாம் தமிழர் இயக்கத்தினதும், திராவிட முன்னேற்றக் கழகத்தினதும் தினசரிப் பத்திரிகைகள்.

இந்தப் பத்திரிகைகள் எமது நாட்டினதும் மக்களினதும் நலன்களுக்கும் எமது நாட்டின் சுயாதிபத்தியத்திற்கும் கூட முரணான கருத்துக்களைத் தருகின்றன. எம்மைப் பொறுத்தவரையில் பத்திரிகை ஏகபோகம் என்பது தென்னிந்திய பத்திரிகைகளின் ஏகபோகமே என்றால் மிகையல்ல.

### உள்நாட்டு விவகாரங்களில் தலையீடு

சமீப காலங்களில் தென் இந்திய பத்திரிகைகள் எமது நாட்டின் உள் விவகாரங்களில் தலையிட்டும் எமது நாட்டின் தேசிய ஒருமைப் பாட்டிற்கு எதிரான கருத்துக்களைப் பரப்பியும் உள்ளன. இவற்றில் மிகச் சிறந்த உதாரணம், 1958-ம் வருட இனக் கலவர சமயத்தில், கல்கியில் முன்னாள் இந்திய கவர்னர் ஜெனரல் சி. ராஜகோபாலாச்சாரி எழுதிய தலையங்கமாகும். அவர் இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியாவிலிருந்து மிகப் பாரதூரமான ''உதவி'' கிட்டும் என்பது போல எழுதி, ஏற்கனவே புண்பட்டு, ஜுவாலித்திருந்த உர்ணச்சிகளை விசிறிவிட்டார். இத் தலையங்கம் இலங்கையில் விநியோகிக்கப்பட்ட பிரதிகளில் மட்டுமே இருந்தது. இந்தியாவில் விநியோகிக்கப்பட்டவற்றில் இருக்கவில்லை எனவும் அறியவந்தோம். கல்கிப் பத்திரிகையின் ஒரு பகுதியாக அச்சிடப்பட்டிருந்ததுடன் இது துண்டுப் பிரசுர ரூபத்திலும் அச்சிடப்பட்டு கல்கி பிரதிகளுக்குள்—விநியோகத்திற்காகப் போலும்—வைக்கப்பட்டிருந்தது; அந்த நேரத்தில் இந்த நாட்டில் நிலவிய குழப்ப நிலை காரணமாக இங்கு ஒரு செய்தித் தணிக்கை அமுலிலிருந்தது. இந்தத் தலையங்கம் தணிக்கையின் நோக்கத்தை முற்றாக முறியடித்தது. இதே போன்ற மற்றுமொரு விஷயம், இலங்கையில் தி. மு. க. வும் அதன் பிரசுரங்களும் தடை செய்யப்பட்டுள்ள போதிலும், தி. மு. க. பத்திரிகைகள் பெருமளவில் இறக்குமதியாகின்றன என்பதாகும். தி. மு. க. வின் பிரச்சாரம் தெளிவாக தேசவிரோத, வகுப்புவாத தன்மையானது. இது எமது நாட்டின் சுயாதிபத்தியத்தைப் பேணுவதற்காக நிறுத்தப்பட வேண்டிய ஒரு பிரச்சாரமல்லவா?

—அடுத்த இதழில் முடிவுறும்


# பாட்டாளி வர்க்கத்தின் இன்பத் திருநாள்!

# இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தின் செங்கொடி பட்டொளி வீசிப் பறந்தது

சென்ற சனிக்கிழமை இலங்கைத் தொழிலாளி வர்க்கத்தின் சரித்திரத்திலே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படக் கூடிய பொன்னுள். இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தின் முன் முயற்சியினுல், ஏற்படுத்தப்பட்ட தொழிற் சங்கங்களின் கூட்டுக் கமிட்டியினுல் அங்கீகரிக்கப்பட்ட 21 கோரிக்கைகளுக்காதரவாக நடைபெற்ற பிரமாண்டமான ஊர்வலமும் பொதுக் கூட்டமும். கொழும்பு நகரெங்கும் செங்கொடி மயம். தொழிலாளி வர்க்கத்தின் ஐக்கிய கோஷங்கள் விண்ணதிர முழங்கின. செங்கொடி சகிதம் பவனிவந்தது பாட்டாளி வர்க்கக்கூட்டம்.

தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களும்; துறைமுகம், புகையிரதம், தபால்சேவை, மின்சாரம், தேயிலை, றப்பர் ஏற்றுமதி, இறக்குமதி அரசாங்க அலுவலகங்கள், தனியார் துறைகள், தோட்டப் பகுதிகள் ஆகியவற்றில் வேலை செய்பவர்கள், இன, மத, மொழி வேறுபாடேதுமின்றி, வர்க்க உணர்ச்சியுடன் கொழும்பு நகரெங்கும் அணிவகுத்துச் சென்றனர். தொழிற் சங்க ஐக்கியம் வாழ்க, 21 கோரிக்கைகளை வென்றெடுப்போம் என்ற கோஷங்கள் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வானதிர முழங்கின. ஆண்களுடன் பெண்களும் சரிசமமாக வெற்றிக்கொடி பிடித்து வீரமுழக்கம் செய்னர்.

இதில் பெருமைக்குரிய பாகம் கொண்டது இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனம்; தொழிலாளர்கள் எல்லாம் எம்மைவிட்டு ஓடுகின்றனர், தமதணியில் சேருகின்றனர் என்று பொய்ப் பிரசாரம் செய்த திரிபுவாதக்கும்பலுக்கு முகத்தில் கரி பூசியதுபோல் அமைந்தது இலங்கைத் தொழிற் சங்க சம்மேளன ஊர்வலம். எண்ணி 400 பேர் அடங்காத ஊர்வலத்தை, ஏனைய பகுதிகள் மத்தியில் திரிபுவாதக் கெனமன் தலைமை தாங்கிச் செல்ல, இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனம் என்றும்போல் இன்றும் பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள், அணிதிரண்டு ஊர்வலத்தின் இறுதியில் சென்றது. சம்மேளனத்தின் தலைவர்கள் முன்செல்ல, செங்கொடிகள் கையிலேந்தி புரட்சிகரக் கோஷங்களுடன் வீரநடை போட்டுச்செல்ல, பார்த்துக் கொண்டு நின்ற மக்கள் கரகோஷம் செய்து வரவேற்றனர். தொழிலாளர் ஐக்கியம் வாழ்க, 21 கோரிக்கைகளை வென்றெடுப்போம், புரட்சிப்பாதை எமது பாதை, லெனின் சென்ற பாதையில், அக்டோபர் புரட்சியின் பாதையில், சீன மக்களின் பாதையில், வீரமிக்க கியூபாவின் பாதையில், பிடல் காஸ்ரோவின் பாதையில், சன்ஸிபார் சென்ற பாதையில் வெற்றி காண்போம். போராட்டப் பாதையில் துணிந்து செல்வோம் என்ற கோஷங்களை ஏனைய பகுதிகளைப் போல் இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத் தோழர்கள் விண்ணதிர முழங்கினர்.



காலிமுக மைதானத்தில் திரண்டிருந்த ஜனசமுத்திரத்தின் அமோக ஆதரவைப் பெற்ற இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தின் பொதுக் காரியதரிசி தோழர்நா.சண்முகதாசன்.

# 21 கோரிக்கைகளுக்கான ஊர்வலம் பொதுக்கூட்டம்

மருதானையில் ஒரு பகுதி இருக்கும் போதே ஊர்வலத்தின் முற்பகுதி, தொழிற் சங்கங்களின் கூட்டுக் கமிட்டி என்ற பதாகையுடன் காலிமுக மைதானத்தை வந்தடைந்தது. நகரெங்கும் உலாவி வந்த தொழிலாளர் படை, காலிமுகத்தில் சங்கமமானதும் , கூட்டுக்கமிட்டியின் சார்பில் டாக்டர் என். எம். பெரேரா தலைமையில் பொதுக் கூட்டம் ஆரம்பமாகிற்று. அங்கு வந்திருந்த ஜனக் கூட்டம், கடல்போல் திரண்டது. மறுபுறம் இருந்த சமுத்திரத்தைப் போல், ஜனசமுத்திரமாகக் காட்சியளித்தது.

தோழர் ஐ. ஜே. விக்கிரமாவின் தொழிலாளர் கீதத்துடன் கூட்டம் ஆரம்பமாகியது. அவசரகால நிலைமை உடனடியாகநீக்கப்படவேண்டுமென்றும், 21 கோரிக்கைகளுக்கு ஆதரவாகவும், வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கு, தொழிலாளர்களுடன் விவசாயிகளையும் கொண்ட இயக்கம் ஆரம்பிப்பதென்றும் தீர்மானங்கள் தலைவரால் சமர்ப்பிக்கப்பட்டன, கரகோஷம் செய்து வரவேற்கப்பட்டன. நாட்டிற் கெதிராகச் சதி செய்ய முயல்வதற்கு தொழிலாளர்கள்' சரியான பாடம் கற்பிப்பர் என்று கூறிருர்.

இலங்கைத் தொழிலாளர்கள் சம்மேளனத்தின் சார்பில் பேசிய கொல்வின் ஆர்.டி. சில்வா, அரசாங்கம் இன்று தனது பங்கலோட்டுத் தனத்தைச் சமாளிக்க முடியாமல் அவசரகால நிலையை உருவாக்கியுள்ளது. எதிர்ப் புரட்சிக் காரர்களை முறியடிக்க தொழிலாளி வர்கம், புரட்சிப் போராட்டங்களில் இறங்க வேண்டுமென்று குறிப்பிட்டார்.

இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் சார்பில் பேசிய தோழர் பாலா தம்பு, தொழிலாளர்களின் ஐக்கியத்தையும் வலிமையையும் பற்றிக் குறிப்பிட்டார். இன்று அரசாங்கம், தனித்தியங்க முடியாமல் தத்தளிக்கிறது. தொழிலாளி வர்க்கத்திற்கு முதலாளிகளும், அரசாங்கமும் பல அநீதிகளை விளைவித்துள்ளார்கள். இந்த நிலையில் இடதுசாரித் தலைவர்கள் யாராவது அரசாங்கத்துடன் கூட்டுச்சேர நினைத்தால், தொழிலாளி வர்க்கத்திற்கு அதைவிட வேறு துரோகம் செய்யவேண்டியதில்லை எனவும் தொழிலாளி வர்க்கம், புரட்சிப் பாதையில் ஆட்சியைக் கைப்பற்ற வேண்டிய அவசியத்தையும் வற்புறுத்தினர்.

இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் என். சண்முகதாசன் பேச எழுந்ததும், தொழிலாளர்கள் நீண்ட நேரம் கரகோஷம் செய்து அவரை வரவேற்றனர். அவர் பேசும்போது இன்று இலங்கைத் தொழிலாளி வர்க்கத்தின் சரித்திரப் பிரசித்தி பெற்ற நாளாகும். இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனம் பல காலமாகத் தொழிலாளி வர்க்கத்தின் ஐக்கியத்திற்காகப் போராடி வந்துள்ளது. துறைமுக வேலை நிறுத்தம், வங்கி ஊழியர் வேலை நிறுத்தம், வீரம் செறிந்த இ. போ. ச. வேலை நிறுத்தம் ஆகிய போராட்டங்களின் படிப்பினையாக, தொழிலாளி வர்க்கம் இனிமேலும் பிளவுண்டு வாழமுடியாது என்பதை உணர்ந்து நாம் எடுத்த முயற்சிகள் பயனளித்துள்ளன. அன்று நாம் கூறியதை இன்று சகல தொழிற் சங்க மத்தியஸ்தானங்களும் ஏற்றுக் கொள்கின்றன. இதன் விளைவு தான் இந்த ஐக்கியம் பெற்ற மாபெரும் கூட்டம் ஆனுல் இத்துடன் நாம் திருப்தி கொள்ளக் கூடாது. இங்கு ஐக்க்சியப்பட்டுள்ள சகல தொழிலாளர்கட்கும், தலைவர்கட்கும் நன்றி தெரிவிப்பதுடன், இந்த ஐக்கியத்தை மேலும் பலப்படுத்தி இந்த நாட்டில் ஓர் நிரந்தரமான, தொழிற் சங்க மத்தியஸ்தானத்தை அமைக்க உதவுமாறு மன்ருட்டமாக வேண்டுகிறேன் என்ருர். எமது கோரிக்கைகளை வென்றெடுக்கும்வரை நாம் தொடர்ந்து போராடுவோம். இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தின் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் எந்தத் தியாகத்திற்கும் தயார் என்று நீண்ட கரகோஷத்தின் மத்தியில் கூறினுர். எமது ஐக்கியத்தின் சக்தியால் நாம் கட்டாயம் வெற்றிபெறுவோம்.

அரசாங்கம் இன்று ஊசலாடும் நிலையில் உள்ளது. தொழிலாளி வர்க்கத்திற்குத் துரோகம் செய்கிறது. தனது கோளாறுக்கு மருந்தில்லாமல், இன்று முட்டுக் கொடுப்பதற்காக பல பகுதிகளையும் வாலாயம் செய்ய முயற்சிக்கிறது. தொழிலாளி வர்க்கத்தின் பிரதிநிதிகள் இப்பேற்பட்ட சலுகைகளுக்காக சந்தர்ப்பவாதிகளாக மாற மாட்டார்கள் என்று நாம் திட்டவட்டமாகக் கூறவேண்டும் என வற்புறுத்தியதும், கூட்டம் முழுவதும் நீண்ட கரகோஷம் செய்தது. தொழிலாளி வர்க்கத்தின் பாதை போரட்டப் பாதை. இதில் நாம் ஐக்கியத்துடன் போராடினுல், எமது கோரிக்கைகளை வென்றெடுப்பது நிச்சயம். தொழிலாளி வர்க்கத்தின் சக்திக்கு முன்னுல் எதிர்த்து நிற்க வேறு சக்தி ஏதுமில்லை. 21 கோரிக்கைகளை வென்றெடுப்போம். தொழிலாளர்கள் ஐக்கியம் வாழ்க என்று கூறி முடித்தார்.

-நமது விசேஷ நிருபர்

★ தரமான தாள்கள்

★ அச்சுக்கு நேர்த்தியானவை

★ பத்திரிகைகள், புத்தகங்கள், பிரசுரங்கள் அச்சடிக்க சிறந்த தாள்கள்

உடனடியாக விண்ணப்பியுங்கள்:

இலங்கை டிரேட் எக்ஸ்சேஞ்

மெர்க்கண்டைல் ஹவுஸ், 56/6 , ராணி வீதி, கோட்டை.

# புரட்சிகரத் தொழிலாளப் பெருமக்

## புரட்சிக் கோஷங்கள் வானுயர எழுந்த

கடந்த சனிக்கிழமை கொழும்பு நகரம் பூராவும் செங்கொடி மயம். காலிமுக மைதானம் முழுதும் கடல் போல் ஜன சங்கமம். இலங்கைச் சரித்திரத்திலே மிகப் பிரபலமான—மிகப் பரந்த தொழிற் சங்க ஊர்வலமும் கூட்டமும் 21 கோரிக்கைகளுக் காதரவாக நடைபெற்றது. இலங்கைத் தொழிற் சங்க சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய தினமது. 14 பிரதான தொழிற்சங்க மத்தியஸ்தானங்கள் முதல் முதலாக பொதுவான கோரிக்கைகள் அடிப்படையில் ஒன்று திரண்டன. தொழிற் சங்கங்களின் கூட்டுக் கமிட்டியினுல் தயார் செய்த கோரிக்கைகளுக் காதரவாக வெகு பிரம்மாண்டமான ஊர்வலமும் பொதுக் கூட்டமும் நடைபெற்றது. அரசாங்க ஊழியர்கள், தனியார் துறை ஊழியர்கள், ஆசிரியர்கள், ஆகியோருடன் முதல்முறையாக தோட்டத் தொழிலாளர்கள் எல்லோரும் ஓரணியில் தத்தம் பதாகைகளுடன் பவனிவந்தனர்.

இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் ஊர்வலம் தான் இதில் மிகப் பெரியது என்பதே பொதுவான அபிப்பிராயம். சண்டே டைம்ஸ் பத்திரிகையும் டெய்லிநியூஸ் பத்திரிகையும் (எமக்கு நண்பர்களல்ல) சி.டி.யூ. எப். ஊர்வுலம்தான் மிகப் பெரியது என்பதையும், காலிமுக மைதானத்தை அடைய கூடிய நேரம் எடுத்ததென்பதையும் ஏற்றுக் கொண்டன.

''சண்முகதாசன் தலைமையில் இலங்கை தொழிற்சங்க சம்மேளனம், ஊர்வலத்திலும் கூட்டத்திலும் மிகப்பெரிய பகுதியாகக் காட்சியளித்தது. மைதானத்தை வந்தடைய, இவர்கள் தான் கூடிய நேரம் எடுத்தனர்' மேடைவரை ஊர்வலம் தொடர்ந்து சென்று தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிக் கோஷங்களை முழங்கியது'' என்று கூறியது சண்டே டைம்ஸ் பத்திரிகை.

''ஊர்வலத்தின் மிகப்பெரிய பகுதியாக சி. டி. யூ. எப். ஊர்வலம் ஓர் இடத்தைக் கடந்து செல்ல 12 நிமிடங்கள் சென்றன'' என்று டெய்லி நியூஸ் பத்திரிகை கூறியது.

ஆனுல் கெனமன் கும்பல் தம்பட்டமடித்துத்திரிந்த திருக்கூட்டம்—சி. டி. யூ. எப். பின் போட்டித் தொழிற் சங்க சம்மேளனம் எங்சே? கெனமன்—மெண்டிஸ் கும்பல் சி. டி. யூ. எப்.பைப் பிளவு படுத்தியபின் இவ்விரு பகுதிகளும் பங்குகொள்ளும் முதல் ஊர்வலமாதலால், இவ்விரு ஸ்தாபனங்களின் பலத்தையும், சக்தியையும் கணிப்பதற்கு எல்லோரும் ஆவலுடன் எதிர்பார்த்தனர். இப் பிளவுவாதிகள் இரண்டு வாரங்களுக்கு முன் நடத்திய தொழிற்சங்க மகாநாட்டில் 60-70% விகிதம் சி,டி.யூ.எப். தொழிலாளர்கள் தமதணியில் சேர்ந்து விட்டனரென கெனமனும், மெண்டிசும் பிதற்றினர். பிராவ்டா பத்திரிகை சோவியத் மக்கன் மத்தியில் ''தொழிலாளர்கள் சண்முகதாசன் பின்னுல் செல்லவில்லை. மெண்டிஸ் தலைமையில்தான் உள்ளனர்'' என்ற செய்தியுடன் உலாவியது. ஆனுல் இத் தொழிலாளி வர்க்கமும், தொழிற் சங்க ஆதரவும் எங்கே?

### சி. டி. யூ. எப். தலைமையில்



சி.டி.யூ.எப். ஊர்வலத் தலைமையில் தோழர்கள் நா. சண்முகதாசன், ஆரியவன்ச குணசேகர, என். எல். பெரேரா, விக்டர் சில்வா ஆகியவர்கள் வீர நடை போட்டுச் செல்கின்றனர்.

சி. டி. யூ,எப். வழக்கம்போல் மிகப்பெரிய ஊர்வலத்தை நடத்தியது. (சார்பற்ற பார்வையாளர்களின் அபிப்பிராயமும் அதுவே) இதன் மூலம் தனது அங்கத்தவர்களின் மிக அதிகப்படியானவர்கள், இன்றும் சி. டி. யூ. எப்.பில்தான் உள்ளனர் என்பது நிரூபிக்கப்பட்டது. கெனமன் கும்பலின் பிளவுவாதிகளால் சில நூறு தொழிலாளர்களைத் தன்னும் தமதணியில் திரட்ட முடியவில்லை.

ஆட்கள் சேரவில்லை என்று தெரிந்ததும் தமது எம். இ. பி. நண்பர்களுடன் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பதாகவே நகரத் தொடங்கினர். வெட்கத்தால் தலைகுனிந்த திரிபுவாதத் தலைவர்கள் யாவரும் கூட்ட மைதானத்திற்கே வரவில்லை.

எம். ஜி. மெண்டிஸ் அங்கு இருக்கவில்லை. தனது பிளவு வாதிகளின் சொர்க்கலோகமான மாஸ்கோவுக்கு அவர் சென்றுவிட்டார். இலங்கை தொழிலாளி வர்க்கத்தின் முக்கிய தினங்களில் வெளி

### கெனமன்

நாடு செல்லும் பழக்கத்தை தொடர்கிறுர். சண்முகதாசனின் பின்னுல் சிடியுஎப் ஊர்வலம் மேடையை நோக்கிச் செல்லும்போது மேடையிலிருந்த கெனமன் முகத்தில் ஈயாடவில்லை. படம் எடுப்பவர்களுக்கு முகம் கொடுப்பதற்காக மேடையின் முன் பகுதியில் ஏறியிருந்த கெனமன் சிடியூஎப் தொழிலாளரின் புரட்சி கோஷங்களுக்கிடையில், தனது சகாக்கள் யாருமின்றித் தனிமைப்பட்டு அவஸ்தைப் பட்ட காட்சி, பரிதாபமாகத்தான் இருந்தது.

சி. டி. யூ. எப். மாநாட்டின் பின் கெனமன்-மெண்டிஸ் கும்பல், தனிப்பட்ட ஓர் அரசியல் சக்தி என்ற நிலை மாறி, அரசியல் துறவு பூண்டவர்கள் என்பதும், தொழிற் சங்க இயக்கத்தில் புறக்கணிக்கப்பட்டவர்கள் என்பதும், யூ. எல்.

எப்.பி... கொ... களின்... தில் இ... யும் இ... த்தினு... மின்றி... மத்தி... ழிலா...

னின்... விட்ட... குறி... மன்... தால்... செய்... சென்... கூட்ட... வர்க்... லாளை... தோழ... கும்,... தான்... வரமே... பிடத்... புக்... பெரிய... வர்த்... தும்... தொ... தும்... டத்... ரங்க... சி.டி... பிளவ...

# கட்சியை பிளவுபடுத்தும் திரிபுவாதிகளை (

## தமிழகக் கம்யூனிஸ்ட் கட்சியின் போராட்டம்

தமிழக கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையில் இன்று ஆதிக்கம் வகிக்கும் திரிபுவாதிகளின் அட்டூழியங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

ஜனசக்தி (வெளியூர் பதிப்பு 4-3-64) யில் தோழர்கள் ராமமூர்த்தியையும், சிந்தனையும் கேவலமான முறையில் கண்டபடி தாக்கி வெளியிடப்பட்டுள்ள சென்னை மாவட்டத் 'தலைமையின்' (அதாவது பாலதண்டாயுதத்தின்) ''அறிக்கையை'' தோழர்கள் பார்த்திருப்பார்கள்.

சென்னை ஏழுகிணறு வட்டாரத்தில் 27-2-64-ம் திகதி அவ் வட்டாரக் கட்சிக் கிளையின் சார்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர் ராமமூர்த்தி சிறப்பானதொரு சொற்பொழிவை ஆற்றினுர். அக் கூட்டத்தில் தோழர் சிந்தனும் கலந்துகொண்டார். அவர்களுடைய சொற்பொழிவுகளைத் தீக்கதிரின் அடுத்த இதழில் பிரசுரிக்கிறேம். அவற்றைப் படித்தால் அவை சிறந்த பிரசங்கங்கள் என்பது தெளிவாகும்.

சில பத்திரிகைகளில் அந்தப் பிரசங்கங்கள் ஏற்கனவே ஓரளவு பிரசுரிக்கப்பட்டுள்ளன. அவற்றைப் படித்துள்ளவர்கள் கட்சி விரோதக் கொள்கையெதையும் அவற்றில் காணவில்லை. காங்கிரஸ் ஆட்சியின் மக்கள் விரோதக் கொள்கைகளையும், சுதந்திரா கட்சியின் வலதுசாரிப் பிற்போக்குத் தன்மையையும், தி. மு. க. கூட்டணியின் சந்தர்ப்பவாத அரசியலையும் அந்தப் பிரசங்கங்கள் அம்பலப் படுத்துகின்றன; கம்யூனிஸ்ட் கட்சியின் திட்டத்தை மக்களுக்கு விளக்கிக் கூறுகின்றன.

ஆனுல் கம்யூனிஸ்ட் கட்சியை காங்கிரஸின் எடுபிடி ஆளாக மாற்ற விரும்பும் தண்டாயுதத்திற்கும் அவரது கூட்டாளிகளுக்கும் ராமமூர்த்தி, சிந்தன் ஆகியோரின் பிரசங்கங்கள் கசப்பாக இருப்பது இயற்கையே.

நடந்து முடிந்த நகரமன்றத் தேர்தல் இயக்கத்தின்போது தமிழகத்தின் பல நகரங்களில் தோழர் ராமமூர்த்தி பேசினுர்; அவரது பிரசங்கங்களை பல்லாயிரக் கணக்கான மக்கள் ஆங்காங்கு கேட்டு அங்கீகரித்தனர்; மகிழ்ச்சியடைந்தனர்; அரசியல் தெளிவும் உத்வேகமும் பெற்றனர்; அதன் விளைவாக தேர்தல் இயக்கத்தில் தீவிரமாகப் பாடுபட்டனர். இது தோழர்களின் அனுபவம்; மக்களின் அனுபவம்.

27-2-64—ம் திகதி சென்னையில் ஏழு கிணறு வட்டார கட்சிப்பொதுக் கூட்டத்தில் அவர் பேசிய பேச்சும் முன் கூறப்பட்டுள்ள அதே அரசியல் அடிப்படையில்தான் அமைந்திருந்தது. அதைக் கேட்கக் கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் அவரது பிரசங்கத்தை அங்கீகரித்து சந்தோஷ ஆரவாரம் செய்தார்கள்.

ஆனுல் காங்கிரஸுடன் 'தேசிய கூட்டணி' அமைத்து விஜயவாடா கட்சித் தீர்மானத்தைப் பகிரங்கமாக உடைத்தெறிந்துவிட்ட திரிபுவாதிகளான பாலதண்டாயுதமும் அவரது சகாக்களும்,ராமமூர்த்தியை 'ஒழித்துக்கட்டினுல்' தான் காங்கிரஸின் தொங்குதசைகளாகக் கம்யூனிஸ்ட் கட்சியை மாற்றுவதற்கு தாங்கள் போட்டிருக்கும் சதித் திட்டம் வெற்றி பெற முடியுமென்று கருதி, தோழர் ராமமூர்த்தியை மூர்க்கத்தனமாகத் தாக்கி வருகின்றனர். இந்த சதித் திட்டத்தை தமிழகக் கட்சித் தோழர்களும், அனுதாபிகளும், தொழிலாளர்களும், பொது மக்களும் ஆழமாக உணர வேண்டும். இந்தச் சதிச் செயலை சுக்குநூருக உடைத்தெறிய வேண்டும்.

தோழர் ராமமூர்த்தியைத் தாக்கி பாலதண்டாயுதம் இப்பொழுது பேசிய முதல் கூட்டம் எங்கு தெரியுமா? சென்னை நகரில் 98-வது வட்ட காங்கிரஸ் கட்சியின் சார்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேம். மிகவும் பொருத்தமான இடம்; பாலதண்டாயுத

மும்... உட... வேண்... அது... கிடை...

தே... சிந்த... களைப்... அறி... யது... வேலை... கவும்... வேண்... தம்,... ஆகி... தலை... வகிக்... கோ... கொ... வினை...

தப... குழு... ''பெ... கேவ... தைய... விடு...

# ...ருமக்களின் பிரமாண்ட ஊர்வலம்

## ...எழுந்த பொன்னுள்

...மைதா
...ரவில்லை.
...ஸ் அங்கு
...பிளவு
...க்கலோக
...து அவர்
...இலங்கை
...கத்தின்
...வெளி

எப்.பின் வாலில் தொங்கிக் கொண்டிருக்காவிடில் இவர்களின் பெயர்களே ஞாபகத்தில் இருக்காதென்ற உண்மையும் இந்த மாபெரும் ஊர்வலத்தினுல் எதுவித சந்தேகமுமின்றி நிருபிக்கப்பட்டுள்ளது. மத்திய கொழும்பிலும், தொழிலாளர் மத்தியிலும் கெனம

கொண்ட சில நூறு தொழிலானருக்கும் உண்மைநிலைமை தெளிவுபெற்றிருக்கிறது. சி. டி. யூ. எப். முழுவதும் கெனமன், மெண்டிஸ்சுடன் சென்றுவிட்டதென்ற பொய்ப் பிரச்சாரத்தை இவர்கள் நம்பியிருந்தனர். ஆனுல், சி.டி.யூ. எப். என்றைக்கும் விடப்

டுச் செயலாளர்களில் ஒருவராக இயங்கும் தொழிற் சங்க கூட்டுக் கமிட்டியில் சேர விண்ணப்பித்ததுதான். சனிக்கிழமை சண்முகதாசனுடன் ஒரே மேடையில் தோன்றவேண்டிய நிர்ப்பந்தம் கெனமனுக்கு ஏற்பட்டது. சண்முகதாசனையும் சி.டி.யூ.எப். பையும்அப்புறப்படுத்த,தனிமைப் படுத்த முனைந்த திரிபுவாதிகளுக்குக் கிடைத்த பதில் இதுதான். கூட்டத்தில் பேசிய தோழர் சண்முகதாசன் 21

நிறுத்தங்களை முறியடித்த அரசாங்கம், சம்பள உயர்வுத் தடையை பலமாக அமுல் நடத்தும் அரசாங்கம்-இந்த அரசாங்கத்திற்கு தொழிலாளர்களின் ஆதரவு என்றுமே கிடையாது என்பதை, தொழிலாளி வர்க்கத்தின் நன்மையைக் கருதி வெளிப்படையாகப் பிரகடனம் செய்ய வேண்டிய அவசியத்தை வற்புறுத்தினுர்.

தொழிற் சங்க இயக்கத்தின் ஐக்கியம் மேலும் வளர வேண்டுமெனவும் உடனடியாக ஐக்கியப் பட்ட தனியொரு தொழிற் சங்க மத்திஸ்தானம் அமைக்க முன்வரும்படியும் மேடையிலிருந்த தொழிற் சங்கத் தலைவர்களையும், எல்லா அங்கத்தவர்களையும் தோழர் சண்முகதாசன் அறைகூவி அழைத்தார்.

# ...மனின் கூட்டம் எங்கே?

...க்கத்தை
...முகதாச
...ளப் ஊர்
...நோக்கிச்
...மடையிலி
...முகத்தில்
...ம் எடுப்
...கொடுப்
...ன் முன்
...கென
...தொழிலாள
...ஷங்களுக்
...சகாக்கள்
...மைப்
...பட்ட
...கத்தான்

...நாட்டின்
...டிஸ் கும்
...அரசியல்
...றி, அரசி
...ர்கள் என்
...ங்க இயக்
...க்கப்பட்ட
...யூ. எல்.

னின் செல்வாக்குக் குறைந்துவிட்டதற்கும் இது ஓர் அறிகுறி. முந்திய காலத்தில் கெனமன் மேடையில் பேச எழுந்தால் மக்கள் கரகோஷம் செய்து வரவேற்பர். ஆனுல் சென்ற சனிக்கிழமை நடந்த கூட்டத்தில், தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகர அபிலாசைகளுக்கு குரல் கொடுத்த தோழர்கள் சண்முகதாசனுக்கும், பாலா தம்புவிற்கும் தான் நீண்ட கரகோஷமும் வரவேற்பும் கிடைத்தது குறிப்பிடத்தக்கது. சி. டி. யூ. எப். புக் கடுத்தாற் போல் மிகப் பெரிய ஊர்வலம், இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தினதும் (சி.எம்.யூ.), இலங்கைத் தொழிலாளர் காங்கிரசினதும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. பொய்ப் பிரச்சாரங்களுக்கு செவிசாய்த்து சி.டி.யூ.எப். பிலிருந்து விலகி பிளவுவாதிகளுடன் சேர்ந்து

பலம் பொருந்தியதாக ஆகக் கூடிய தொழிலாளர்களை அணிதிரட்ட முடிந்தது. மாருக, பிளவுவாதிகளுக்கு ஒரு சில நூற்றுக்கணக்கான வர்களைக் கூட திரட்ட முடியவில்லை. சனிக்கிழமை ஊர்வலம்,கெனமன் கும்பலின்பிளவு வாதிகளின் பலஹீனத்தைப் பிரதிபலித்ததினுல், சண்முகதாசனின் கொள்கைகளுக்கெதிரான இவர்களின் பிளவு நடவடிக்கைளுக்கு முகத்தில் கரிபூசியது போல் நல்ல பாடம் கிடைத்திருக்கிறது. ஒரே ஸ்தாபனத்தில் சண்முகதாசனுடன் வேலை செய்ய முடியாதென்றுதான்கெனமன் மெண்டிஸ் கும்பல் சி. டி. யூ. எப்.பிலிருந்து விலகி போட்டித் தொழிற் சங்கம் அமைத்தனர். ஆனுல் போட்டிச் சங்கம் அமைத்ததும் இவர்கள் முதல் வேலை, சண்முகதாசன் முக்கிய பங்கு கொண்டு, கூட்

கோரிக்கைகளுக்கான போராட்டத்தில் சி. டி. யூ. எப்.பின் பூரண ஆதரவைத் தெரிவித்தார். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கம் பங்கலோட்டடைந்து விட்டது. பாராளுமன்றத்திலோ, மக்கள் முன்னிலோ அவர்களால் முகங் கொடுக்க முடியவில்லை என்று கூறினுர். இந்த நிலையில், அரசாங்கம் தன்னைக் கொஞ்சக் காலமாவது தாங்கி நிற்பதற்கு முண்டுகள் தேடுகிறது. மக்களின் நல்மதிப்பை இழந்த நேரத்தில், அரசாங்கத்திற்கு முண்டு கொடுப்பதற்கு எதிர்க் கட்சிகளில் உள்ளவர்கள் எவரும் முட்டாள்களாக இருக்கமாட்டார்கள் என்று நம்புகிறேன் எனக் குறிப்பிட்டார்.

என்ருலும், இந்த அரசாங்கம், கருங்காலிகளை ஆதரித்த அரசாங்கம்,போலிஸ்,இராணுவத்தின் உதவியால் வேலை த்தமான முறையில் எடுக்கப்படும் என்பது உறுதி.

# ...ளை முறியடிப்போம்

## ...டம்

...மாற்றுவ
...பாட்டிருக்
...வெற்றி
...கருதி,
...யை மூர்க்
...கி வருகின்
...திட்டத்
...தோழர்
...ம், தொ
...து மக்க
...ர வேண்
...செயலை
...த்தெறிய

...த்தியைத்
...டாயுதம்
...முதல்
...தெரியுமா?
...வது வட்ட
...சார்பில்
...துக் கூட்
...ங்கள் கவ
...டு வருகி
...பொருத்த
...ண்டாயுத

மும் அவரது கூட்டாளிகளும் உடனடியாகப் போய்ச் சேர வேண்டிய சரியான விலாசம் அது என்பதில் சந்தேகமே கிடையாது.

தோழர்கள் ராமமூர்த்தி, சிந்தன் ஆகியோரின் பிரசங்கங்களைப் பற்றி நாசுக்காக அறிக்கை விடவேண்டியது மணலி கந்தசாமியின் வேலை; இவர்களை கேவலமாகவும் பகிரங்கமாகவும் தாக்க வேண்டியது பாலதண்டாயுதம்,ஏ.எஸ்.கே. அய்யங்கார் ஆகியோரின் வேலை; கட்சித் தலைமையில் இன்று ஆதிக்கம் வகிக்கும் திரிபுவாதிகளின் கோஷ்டி தங்களுக்குள் செய்து கொண்டிக்கும் வேலைப் பிரிவினை இதுவே.

தமிழகக் கட்சியின் செயற் குழுவில் உள்ள வேறு சில ''பெரிய மனிதர்கள்'' இந்தக் கேவலமான சூழ்ச்சிக்கு உடந்தையாகவும், இதைத் தூண்டி விடுபவர்களாகவும், இருக்கி

கிறுர்கள் என்பதையும் தோழர்கள் அறிவார்கள்.

தோழர் ஏ.கே. கோபாலனை எதிர்த்தும், கோவைத் தோழர் பூபதியைக் கண்டித்தும் அறிக்கைகளை வெளியிட்டுள்ளனர் திரிபுவாதிகள். இவற்றிலிருந்து ஒரு உண்மை தெளிவாகிறது. கட்சி மாநாடுகள் நடைபெறு முன்பே கட்சியைப் பிளவுசெய்து விடுவது என்று தமிழகத் திரிபுவாதிகளின் கோஷ்டி முடிவு செய்திருப்பதாகத் தோன்றுகிறது.

தோழர் ராமமூர்த்தியைக் கொண்டு கட்சிப் பொதுக் கூட்டத்தை நடத்தியதற்காக ஏழுகிணறு வட்டக் கிளையையும், ஒட்டல் அரங்கக் கிளையையும் 'சஸ்பெண்டு' செய்வதற்கு பாலதண்டாயுதம் கோஷ்டி நடவடிக்கை எடுத்து வருகிறது. இது கட்சியின் ஜனநாயகத்தைக் குழி தோண்டிப் புதைக்கும் செயலாகும். இதை முறியடிக்கும் வகையில் எதிர் நடவடிக்கைகள் பொரு

இதேபோல் மாகாணம் முழுவதிலும் கட்சியைப் பிளவு செய்வதற்கு மணலி கந்தசாமியின் திரிபுவாதக் கோஷ்டி திட்டமிடுகிறது. இந்தச் சீர்குலைவு நடவடிக்கைகளைக் கம்யூனிஸ்டுகள் அனைவரும் கண்டனம் செய்ய வேண்டும்.

கட்சியை சீர்குலைக்கும் இவர்களது நடவடிக்கைகளை எதிர்த்து, கட்சியைப் பிளவுபடுத்தும் இந்தப் பிளவுவாதிகளை எதிர்த்து கம்யூனிஸ்டுகள் அனைவரும் உறுதியுடன் செயல்பட வேண்டும். இவர்களது சூழ்ச்சிகளை கட்சி அணிகளிடம் அம்பலப்படுத்த வேண்டும். காங்கிரஸ் கட்சிக்கும், காங்கிரஸ் ஆட்சிக்கும் இந்திய முதலாளி வர்க்கத்திற்கும் வால்பிடிக்கும் இவர்களின் அரசியலையும், இவர்களது சீர்குலைக்கும் ஸ்தாபன நடவடிக்கைகளையும் உறுதியுடன் எதிர்த்துப் போராடுவோம்; முறியடிப்போம்.

—தீக்கதிர் தலையங்கம்
7-3-64

வெளி வருகிறது

★★★★

கம்யூனிஸ்ட்

★★★★

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின்
தத்துவ சஞ்சிகை
ஆசிரியர்:
தோழர் நா. சண்முகதாசன்

# மின்னும் புரட்சி முழங்குமடா!

—வில்வராஜ்—

சாந்தம், சமாதானம் என்ப தெலாமிங்கு
'மாந்தம்' பிடித்தொரு கொள்கையடா —'மார்பு
ஏந்தப் புறப்படு!' என்பதுதான் எங்கள்
ஏந்தல் லெனின் தரும் பாடமடா.

மின்னும் புரட்சி முழங்குமடா அதன்
பொன்னெளி செங்கதிர் வீசுதடா —இது
அண்ணல் 'மார்க்ஸ்' 'ஏங்கல்ஸ்' மொழிந்தாரடா எங்கள்
தோழர் 'லெனின்' 'ஸ்டாலின்' கண்டாரடா.

'சூ' என்ற பேர்தனைக் கேட்டதுமே இன்று
சீறி யெழுந்திடும் வீணர்களே நீங்கள்
ஆ! வென வாயைப் பிழந்திருங்கள் நாங்கள்
ஆட்சி பிடித்து நடத்திடுவோம்.

செங்கொடி ஏற்றிய இல்லத்துள்ளே உங்கள்
சங்கம் பிழந்திடும் கோட்டைக்குள்ளே எங்கள்
சங்கம் திரண்டொரு நாள்வருமே அன்று
எங்கும் தலைகள் உருளுமடா.

வேறு

## அறு அறு திரிபுவா திகளறு சுவாகா!

வில்வக்குருக்கள்

ஓம்! றீம் றீம் கெனமனும் மெண்டிசும்
ஆமாம்போடும் அத்தனை பேய்களும்
ஞான சூனியமும் பொருள்சேர் பொன்னரும்
பார்த்துப் பார்த்து ஓடிடும் காலம்
பாரினில் விரைவாய் வருகவே சுவாகா
புரட்சி என்றதும் புலம்பியே ஓடும்
புரட்டுப் பசாசும் கிழட்டு நரிகளும்
விரட்டி அடிக்கக் காலமே ஓடிவா
அறு அறு] திரிபுவா திகளறு சுவாகா!

# பாசிஸத்தின் பக்கபலம் ஸ்பெயின் திரிபுவாதிகள்

## கம்யூனிஸ்ட் கட்சியை உருக்குலைக்கின்றனர்

"ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க, ஆசியப் புரட்சி" என்ற ஆங்கில சஞ்சிகைக்கு ஸ்பெயின் நாட்டுக் கம்யூனிஸ்டுகள் சிலர் எழுதிய கடிதத்தை இங்கு பிரசுரிக்கிறோம்.

பிரான்ஸிஸ்கோ, பிராங்கோவின் பாஸிஸக் கொடுங்கோலின் கீழும் திரிபுவாதிகள் "சோஷலிஸத்திற்குப் பாராளுமன்ற மார்க்கம்" பற்றிப் பிதற்றுவதை இது அம்பலப்படுத்துகிறது. ஸ்பெயினில் பிராங்கோ ஏகச் சக்ராதிபதி. தன் ஆயுட்காலம் பூராவிற்கும் சர்வாதிகாரி, தனக்குப் பின் ஆட்சி செலுத்த ஒருவரை நியமிக்க அதிகாரம் பெற்றவன் என்பதைக் கவனிக்கவேண்டும். ஸ்பெயின் கம்யூனிஸ்ட் கட்சியிலுள்ள திரிபுவாதிகள், "சோஷலிஸத்திற்கு மார்க்கம்" என வர்ணிக்கும் ஸ்பெயின் பாராளுமன்றம் பாசிஸ்ட் பிராங்கோ நியமித்த பணப்பேய்களைக் கொண்ட பொம்மைக் கொலு என்பதும் கவனிக்கப்படவேண்டும். தங்கள் பாராளுமன்ற வாதத்திற்குத் திரிபுவாதிகள் "நிலைமை"யையும், "சூழ்நிலை"யையும் சாட்சிக் கிழுப்பதன் போலித்தனம் இதனால் விளங்கும், பாஸிஸ ஸ்பெயின் ஆட்சியின் கீழுமா "பாராளுமன்ற முறையில், சமாதானமாக ஆட்சியைக் கைப்பற்ற வளர்ந்துவரும் சாத்தியக் கூறு" இருக்கிறது?!

நாம் மனம்விட்டுப் பேசவேண்டி உள்ளது. ஸ்பெயின் கம்யூனிஸ்ட் கட்சியின் (பி.சி.ஈ.) தலைமை மாக்ஸிஸ-லெனினிஸ நெறியெனக் காட்ட முயலும், கட்சிக் கொள்கையின் முதுகெலும்பான 'தேசிய சமரசம்' (நஷனல் றிகொன்சிலியேஷன்) அறவே மாக்ஸிஸ-லெனினிஸ நெறியல்ல. உள்ளடக்கத்திலும் சரி, விளைவுகளிலும் சரி; அப்படியே.

கட்சியின் செயற் திட்டத்தில் நாம் காண்பதென்ன? காலமும் தகுதிபெற்ற அதிகாரிகளும் அனுமதித்தால் பாராளுமன்ற மார்க்கமாக சோஷலிஸம் என்பது பற்றிய வியாசமே; ஏதோ சோஸலிஸம் ஒரு மாட்டுச் சண்டை (கண்காட்சி) என்பது போல. சுருக்கமாக, வர்க்கப் போராட்டத்திற்கு மறுப்பு.

கடந்த சில வருடங்களாக இந்த நெறியை அமுலாக்கியது கட்சிக்குப் பல கடுமையான தோல்விகளை விளைவித்துள்ளது. 1959-ல் தலைமை, தொழிலாளர்களின் ஜீவாதார நலன்களை வேண்டுமென்றே புறக்கணித்து, சமரசம் பற்றிய தமது ஆராய்வின் அடிப்படையில், உக்கிரமான வேலையில்லாத் திண்டாட்ட நேரத்தில் அதனை மேலும் அதிகரிக்க மட்டுமே கூடியதான ஒரு வேலைநிறுத்தத்தைத் தொடங்கியது. வேலைநிறுத்தம் தோல்வியுற்றது; அதற்கு விலையாக நாம் தரவேண்டியிருந்தது நூற்றுக்கணக்கான திறம் தோழர்கள், கட்சித் தலைமையின் அசட்டைப் போக்கின் பகடைக் காய்கள், சிறைப்பட்டதே.

1962-ல் ஏப்ரல் 9-ம் திகதி ஆரம்பமாகி அதேமாதம் 20-ம் திகதி நாட்டின் வடபகுதி முழுவதிலும் பூரணமாகிய ஒரு வேலை நிறுத்தத்தால் தொழிலாளி வர்க்கம் கட்சித் தலைமையைத் திடுக்குறச் செய்தது. கட்சித் தலைமைக்கு இத் திடுக்கீட்டிலிருந்து சுதாரித்துக் கொள்ளவே இரு வாரங்கள் சென்றன. (அவர்களின் முதலாவது அறிக்கை ஏப்ரல் 26-ம் தேதி தான் வெளியிடப்பட்டது.)

எஜமானர்களுக்கும் (முதலாளிகள்) தொழிலாளருக்கும் இடையில் போராட்டம் நடந்த அந்த நேரத்தில் அறிக்கைகள் (கட்சித் தலைமையினுடையவை) எல்லாம் 'தேசிய சமரசத்தை' வற்புறுத்துவதோடு நின்றன.

1959-லும், 1962-லும் ஸ்பெயின் தொழிலாளி வர்க்க யதார்த்தத்தைத் தான் அறிந்ததில்லை எனக் கட்சித் தலைமை காட்டிக் கொண்டது. இவ்வாண்டு (1963) அஸ்டூரியாஸில் சுரங்கத் தொழிலாளர் வேலைநிறுத்தத்தின் போது தலைமை மேலும் அதிக தூரம் சென்றது; சுரங்கத் தொழிலாளரைக் கைவிட்டது.

நாம் ஸ்பெயின் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையை அசட்டைப் போக்கிற்கும், திரிபுவாதத்திற்கும், பொறுப்பற்றதனத்திற்கும் குற்றம் சாட்டுகிறோம்.

தலைவர்களின் திரிபுவாத நெறியும், கையாலாகாத்தனமும் கட்சியின் தற்போதைய செயலற்ற நிலைமைக்குக் கொணர்ந்துள்ளன; அது கில்ரோபிள்களினதும், றிட்ருஜோகளினதும், பாதையில் பின்பற்றுகிறது. கட்சியின் அணிகளில் வளர்ந்து வரும் அதிருப்தி இதற்கு நாமே சாட்சியம். சில தோழர்களை கட்சி கொடுக்கவேண்டியபடி கொடுக்கத் தவறும் புரட்சிகர எதிர்நோக்கைத் தேடிக் கட்சியை விட்டு, புரட்சி பற்றிப் பேசும் பிற கோஷ்டிகளை நாடிச் செல்லச் செய்துள்ளது. மற்றவர்கள் நிலைமையைத் திருத்த முயல்கின்றனர். கண்டனம் செய்கின்றனர்; கேள்வியை எழுப்புகின்றனர்—இவர்கள் எல்லோரும் சர்வாதிகார முறைகளாற் தனிப்படுத்தப் படுகின்றனர், இது அனைத்தும் உண்மையிற் கட்சியின் உருக் குலைவையே குறிக்கின்றன.

கட்சியை உருக்குலைத்து அழித்துவிட்டதாக நாம் தலைமையைக் குற்றம் சாட்டுகிறோம்.

தலைமையின் திரிபுவாதக் கொள்கை கட்சியை உருக்குலைத்து அழிக்கின்றதென்றால்; 1962-63 வேலை நிறுத்தங்கள் காட்டியவாறு வெகு ஜனங்கள் அதனை (கட்சியை) தம்மை மூலதனத்திற் கெதிரான போராட்டத்தில் வழி நடத்த வல்லதான தமது வர்க்கக் கட்சியாகக் காணவிடாது தடுப்பதும் இதே கொள்கைதான்

வெகு ஜனங்களிலிருந்து தன்னைத் துண்டித்துக் கொண்டதாக நாம் கட்சித் தலைமையைக் குற்றம் சாட்டுகிறோம்.

கட்சித் தலைமை தனது தேசியசமரசத்துடனும், தனது குட்டி பூர்ஷுவா, சாத்வீகவாதக் கோஷங்களுடனும், தனது திரிபுவாதத்துடனும், வெகு ஜனங்களை ஏமாற்றி அவர்களின் இயக்கங்களுக்கு இடையூறு செய்ய முயல்கிறது, அவர்களின் அணிகளுள் மூலதனத்தை எதிர்ப்படும் போது ஆற்றாமைக்கு இட்டுச் செல்லும் குட்டி பூர்ஷுவா திரிபுவாதப் பிரமைகளை உண்டாக்குகிறது.

ஸ்பெயின் தொழிலாளி வர்க்கத்திற்குத் துரோகம் செய்ததாக நாம் கட்சித் தலைமையைக் குற்றம் சாட்டுகிறோம்.

அந்தச் செயலிழந்த, உருக்குலைக்கும் திரிபுவாதத் தலைமை சீன-சோவியத் தர்க்கத்தில், திரிபுவாதி குருஷ்சோவை ஆதரித்தும் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் புரட்சிகர நெறியைத் தாக்கியும், ஒரு நிலையை எடுத்துள்ளது.

தற்போதைய நிலைமை ஒரு புரட்சிகர மார்க்ஸிஸ-லெனினிஸக் கட்சியை முன்னெப்போதையும் விட இன்று அவசியமாகிறது.

இந்தக் கட்சி உருவாக்கப்படுதலை அவசரமானதாக்கும் போராட்டத் திறத்தையும் வர்க்க உணர்வையும் ஸ்பெயின் தொழிலாளி வர்க்கம் காண்பிக்கிறது. தற்போதய கட்சியிற் தொடர்ந்திருப்பது தொழிலாளி வர்க்கத்திற்கும், மார்க்ஸிஸத்திற்கும் துரோகம் செய்வதாகும். நிலைமையை உணர்ந்த கம்யூனிஸ்டுகள் என்ற முறையில் நாம் திரிபுவாதத் தலைமையிலிருந்து எம்மைத் துண்டித்துக் கொள்கிறோம், சகல உணர்வுள்ள தோழர்களையும் அவ்வாறே செய்யும்படியும், பெல்ஜியம், பிரேசில், பிரிட்டன் முதலிய இடங்களில் தோழர்கள் செய்துள்ளது போல் ஒன்றுக இணையும்படியும் அழைக்கிறோம்.

மார்க்ஸிஸ-லெனினிஸம் நீடுவாழ்க!

ஸ்பெயின் கம்யூனிஸ்டுகள்
மார்க்ஸிஸ்ட்-லெனினிஸ்டுகள்
சிலர்
புருஸெல்ஸ், பெல்ஜியம்

# அரசியல் வியாபாரிகள் பட்ட அவஸ்தை!

## களவு கையும்மெய்யுமாக பிடிபட்டது

மார்ச் மாதம் 21-ம் தேதி கொழும்பு நகரெங்கும் பாட்டாளி வர்க்கத்தின் போர்க் குரல், அண்டம் நடு நடுங்க அதிர்ச்சியுற்ற கோஷங்கள், காலிமுகத்தில் ஒரு புறம் மகாசமுத்திரம். அங்கு ஒரே நிசப்தம். மறுபுறம் மக்கள் சமுத்திரம். அங்கு ஒரே இடிமுழக்கம். தொழிலாளி வர்க்கத்தின் உரிமைக் குரல்.

தொழிலாளி வர்க்கத்தைக் காட்டிக் கொடுப்பவர்கள், தொழிலாளி வர்க்கத்தின் பெயரால் வியாபாரம் செய்ய வந்தனர். துவாய்கள். "யு. எல். எப்" துவாய்கள். விற்பனைக்கு வந்தனர். திரிபுவாதத் தலைவரின் ஆள் பிடிக்கும் காண்டாமிருகத்தின் விசிலடிச்சான் குஞ்சுகள். இதில் தலைக் குஞ்சு திரிபுவாதக் கூண்டிலிருந்து தப்பியோடியவர்களின் இடம் நிரப்பி, பணம் பொறுக்கும் பேர்வழி.

போர்க்கோலம் பூண்டு, கோஷங்கள் செய்து, ஊர்வலம் வந்து, திக்கெட்டும் முழங்கத் தீர்மானம் செய்தவர், துவாய்களைக் கவனிக்கவில்லை. குஞ்சுகள் என்ன செய்யும். மூட்டையைக் கட்டிக்கொண்டு, கொட்டாஞ்சேனையை நோக்கிப் புறப்பட்டன. கையில் குண்டாந் தடியுடன் தலைக் குஞ்சும், மூட்டைகளுடன் மற்றக் குஞ்சுகளும் பஸ் வண்டியின் மேல் தட்டில் முன் வரிசையில் இருந்து பிதற்றிக்கொண்டிருந்தன.

பஸ் முழுவதும் ஜனம். நிற்கவும் இடயில்லை. இருக்கவும் இடமில்லை. கண்டக்டர் தன் கடமையைச் செய்யத் தொடங்கினன். 'டிக்கட்' டிக்கட்' ஒவ்வொரு பிரயாணியிடமும் டிக்கட்டைக் கொடுத்து பணத்தை வாங்கினன்.

ஒரு குஞ்சு டிக்கட் வாங்குவதற்குக் காசை எடுத்தது. மற்றக் குஞ்சு சொல்லிற்று. "சும்மா இரு மச்சான், அவன் வந்தால் பாப்போம். நாங்கள் ஒவ்வொரு நாளும் மீன் கடைக்குப் போகிறோம். கண்டக்டர் வருமுன்னே இறங்கி விடுவோம். டிக்கட் வாங்கிற றதில்லை." "பிரீ சேர்பிஸ்" என்று ஆமோதித்தது தலைக் குஞ்சு. கண்டக்டர் வந்து விட்டான். குஞ்சுகளைப் பார்த்து "டிக்கட், டிக்கட், மாத்தையா டிக்கட் கத்தத. துரை டிக்கட் எடுத்தீங்களா?' என்று கேட்டான். குஞ்சுகள் மௌனம். ஒன்றும் தெரியாதவர்களைப்போல் பாசாங்கு. டிக்கட் எடுத்தவர்கள் போல் பாராமுகம். கண்டக்டர் உரத்த குரலில் "லமயா டிக்கட் கண்ட" (தம்பி டிக்கட் எடு) என்று கத்தினன். குஞ்சுகள் தமக்குத் தெரிந்த சிங்களத்தில் இவ்வளவு நேரமும் ஏன் டிக்கட் கொடுக்க வில்லை.

8-ம் பக்கம் பார்க்க

# ஐக்கிய மே தினம்

### யாழ்ப்பாணத்தில் தொழிற்சங்கங்கள் தயாராகின்றன

சென்றஆண்டுபோலவே இவ்வாண்டும் யாழ்ப்பாணத்திலுள்ள சகல தொழிற்சங்கங்களும் ஒன்றுபட்டு மே தினத்தைக் கொண்டாடுவதற்கான ஒழுங்குகளை இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தின் யாழ்ப்பாணக் கிளை செய்து வருகின்றது.

இது சம்பந்தமான தொழிற் சங்கப் பிரதிநிதிகளின் கூட்டம் இம்மாதம் 27-ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறுகின்றது.

கூட்டு ஊர்வலம் பொதுக் கூட்டம் ஆகியவை பற்றிய ஒழுங்குகள் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்படும்.

# வர்க்க உணர்வு பெற்றெழும் தோட்டத் தொழிலாளர்கள்




இலங்கையின் சரித்திரத்திலே முதன் முறையாக எல்லாத் தொழிற் சங்கங்களும் ஒன்றுபட்டு இம்மாதம் 21-ந் திகதி 21 கோரிக்கைகள் சம்பந்தமாக நடத்திய பிரமாண்டமான ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான தோட்டத் தொழிலாளர்கள் பங்குபற்றி புரட்சிக் குரலெழுப்பிச் சென்ற நிகழ்ச்சி, தோட்டத் தொழிலாளர்கள் விழிப்படைந்து வருகின்றார்கள். சிங்களத் தொழிலாளர்களோடும் நகரத் தொழிலாளர்களோடும் தோளோடு தோள் சேர்ந்து தொழிலாள வர்க்கத்தின் உரிமைகளுக்காகப் போராடத் துணிந்துவிட்டார்கள் என்ற உண்மையை எடுத்துக் காட்டுகின்றது. எல்லா தொழிற் சங்கங்களும் ஒன்று சேர்ந்து 21 கோரிக்கைகளை முன்வைத்த சம்பவம் இந்நாட்டில் தொழிலாள வர்க்க உணர்வும், தொழிற் சங்க இயக்கமும் திரிபுவாதிகளினதும் பிற்போக்குச் சக்திகளினதும் எதிர்ப்பை முறியடித்து வளர்ந்து வருகின்றதென்பதையும், இன வெறியர்களும் பிற்போக்குச் சக்திகளும் இனிமேல் தோட்டத் தொழிலாளர்களையும் நகரத் தொழிலாளர்களையும் பிரித்துவைக்க முடியாதென்பதையும் தெளிவுபடுத்துகின்றது.

**ஓ. ஏ. ராமையா**
ஹட்டன் தோட்டத் தொழிலாளர்கள் சங்கப் பிரதிநிதி


1952-ம் ஆண்டு யூ. என்.பி. அரசாங்கத்தை எதிர்த்துத் தொழிலாளர்கள் போராட்டம் செய்தபோது, அன்றைய காங்கிரசின் பிற்போக்குத் தலைமை தோட்டத் தொழிலாளர்கள் இந்த வீரப் போராட்டத்திலே பங்குபற்றுவதைத் தடைசெய்து முதலாளி வர்க்கத்திற்குப் பாதந் தாங்கியது.

அன்று காட்டிக் கொடுத்த தொண்டமானும் அஸீஸும் இன்று 21 கோரிக்கைகளுக்கு ஆதரவளிப்பவு அவர்களது மனமாற்றத்தையோ, அல்லது அவர்கள் தொழிலாளர்களின் உண்மைத் தொண்டர்களாக மாறிவிட்டார்களென்பதையோ காட்டவில்லை. அதற்கு மாருக, தோட்டத் தொழிலாளர்கள் வர்க்க உணர்வு பெற்று வருகின்றார்கள். தொண்டமானும் அஸீஸும் தொழிலாளர்களின் போராட்டத்திற்குத் துணிந்துவிட்டால் அவர்கள் தூக்கியெறியப்படுவார்கள் என்ற உண்மையையே எடுத்துக் காட்டுகின்றது.

தோட்டத் தொழிலாளத் தோழர்களே! தொண்டமானும் அஸீஸும் 21 கோரிக்கைகளுக்கு ஆதரவளிப்பதாக கூறுகின்றார்கள்; மேடை ஏறிப் பேசுகின்றார்கள். ஆனால் இவர்கள் உண்மையிலேயே உங்களைப் போராட்ட பாதைக்கு அழைத்துச் செல்வார்களா? இருபது ஆண்டுகளுக்கு மேலாக உங்களைத் தவருன பாதையில் கூட்டிச் செல்வார்களா? சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் நன்கு சிந்தித்துப் பார்த்தால், உங்கள் உரிமைகளுக்காகப் போராடுவதாக பாசாங்கு செய்யும் இவர்கள், தொழிலாளர்களின் உரிமைகளுக்காகப் புரட்சிகரமான போராட்டங்கள் நடத்தமாட்டாங்களென்பதையும், சீர்திருத்தவாத, பிற்போக்குத் தலைமையின் கீழ் தோட்டத் தொழிலாளர்கள் புரட்சிகரமான போராட்டத்தை நடத்தவே முடியாதென்பதையும். உரிமைகளைப் பெற முடியாதென்பதையும் உணர்வீர்கள். புரட்சிகரமான போராட்டங்களை ஒரு புரட்சிகரமான தலைமையில்தான் நடத்தி வெற்றிப் பெற முடியுமென்பதையும், இந்தப் புரட்சிகரக் கட்சி மார்க்ஸிஸ்ட் - லெனினிஸ்ட் கட்சியென்பதையும், இந்த மார்க்ஸிஸ்ட் - லெனினிஸ்ட் கட்சிதான் தோழர்கள் சண்முகதாசன் - பிரேம்லால் ஆகியோரின் தலைமையில் வெற்றி நடைபோடும் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியென்பதையும், இந்தக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின் கீழ் இயங்கும் இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தில் இணைக்கப்பட்டிருக்கும் செங்கொடிச் சங்கத்தின் வீரக் கொடியின் கீழ் அனிதிரளுவதன் மூலம்தான் உங்களுடையப் போராட்டங்களை வெற்றிகரமாக நடத்த முடியுமென்பதையும் அறிவீர்கள்.

தொண்டமான், அஸீஸ் தலைமை காட்டிக் கொடுத்தாலும், பிற்போக்குத் தலைமையை தூக்கி எறிந்துவிட்டு, புரட்சிகர அணியில் சேர்ந்து தோட்டத் தொழிலாளர்கள் 21 கோரிக்கைகளின் வெற்றிக்காகப் போராட வேண்டும். இந்தப் போராட்டத்தின் வெற்றிதான்தொழிலாளிவர்க்கத்தின் ஐக்கியத்தைப் பலப்படுத்தும்; துரோகிகளைக் காட்டிக் கொடுக்கும். இந்நாட்டில் தொழிலாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத்தை யமைக்க இப்போராட்டம் ஒரு முன்னேடியாக இருக்கும். ஆகவே 21 கோரிக்கைகளின் வெற்றிக்காகப் போராடுவதற்காக தோட்டத் தொழிலாளர்கள் இப்போதிருந்தே தங்களைத் தயார் பண்ணிக் கொள்ள வேண்டும்.

# வடபகுதி பீடித்தொழிலாளர் திரளுகின்றனர்



தோழர் நீர்வை பொன்னையன்
சி.டி.யூ.எப்.பின்
யாழ்பிரதேசப் பிரதிநிதி

பதின்நான்கு வயதிற்கு உட்பட்ட பிள்ளைகள் நமது நாட்டின் சட்டப்படி பாடசாலைகளிலே படிக்க வேண்டும். ஆனால், அவர்களில் பலர் பீடிக் கொட்டில்களிலே வேலை செய்கின்றனர். இதனால் அவர்களுடைய வாழ்க்கையே பாதிக்கப்படுகிறது, இது மாத்திரமல்ல பீடித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் 40,000 தொழிலாளர்களும் அவர்களுடைய குடும்பங்களும் பெருமளவில் பாதிக்கப்படுகின்றன. ''இவ்வாறு இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தின் யாழ்ப்பாணப் பிரதிநிதி தோழர் இ. பொன்னையா 18-ம் திகதி சம்மேளனத்தின் கிளைக் காரியாலயத்தில் நடந்த வட-மாகாண பீடித் தொழிலாளர் கூட்டத்தில் கூறினர்.

மேற்படி கூட்டத்திற்கு ஜனப் பி. எம். பாட்ஜா தலைமை வகித்தார். மேலும் பொன்னையா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: இன்று இலங்கையிலுள்ள பீடி முதலாளிகள் தொழிலாளர்களுடைய கழுத்தை அறுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்கள். பெண்களை குறைந்த பட்சக் கூலிக்கு தொழிலில் ஈடுபடுத்தி நிரந்தரத் தொழிலாளர்களுக்குப் பங்கம் விளைவிக்கின்றனர். குறைந்தபட்ச வேலை நேரம் கொடுப்பது; சரியான நேரங்களில் சம்பளம் கொடாமல் விடுவது; தங்களுக்கு வேண்டிய நேரங்களில் தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்குவது; தொழிற் சங்க வேலைகளில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளரை பழிவாங்குவது ஆகிய தொழிலாளர் விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்த அநீதிகளை அகற்ற வேண்டுமானல் தொழிற் சட்டங்களை அமுல் படுத்துவதற்கு தொழிற்சாலை முறையை அரசாங்கம் பீடித் தொழிலாளருக்கு ஏற்படுத்த வேண்டும். அரசாங்கத்தை நிர்ப்பந்தித்து இந்த மாற்றத்தை நடைமுறைக்குக் கொண்டு வர பீடித் தொழிலாளர்கள் சங்கரீதியாகத் திரண்டு போராட வேண்டும். இப்போராட்டத்திற்கு இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனம் தனது பூரண ஆதரவையும் ஒத்துழைப்பையும் கொடுப்பதற்குத் தயாராக இருக்சின்றது. சமீபத்தில் சினிமாத் தொழிலாளர்களும், இலங்கைப் போக்குவரத்துச் சபைத் தொழிலாளர்களும் பெற்றெடுத்த வெற்றிகள் தொழிலாளர்களுடைய ஐக்சியப் போராட்டத்திலே கிடைத்தது.

இக் கூட்டத்தில் ஆர்.வி.ஜி. பீடிக் கம்பனி, முல்லா பீடிக் கம்பனி, செல்வம் பீடிக் கம்பனி, சிலோன் பீடிக் கம்பனி ஆகிய பிரதிநிதிகள்: மாகத்துங் கந்தையா, பழனி, நல்லதம்பி, பத்மநான் ஆகியோர் பேசினர்கள்.

மேற்படி நான்கு பீடிக் கம்பனிகளின் தொழிலாளர்களும் ஒன்றுதிரண்டு தொழிற் சங்கம் அமைத்து இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்துடன் இணைந்துள்ளனர்.

வட-மாகாண பீடித் தொழிலாளர் சங்கத்தின் தலைவராகத் தோழர் எஸ்.பி.மூர்த்தி அவர்கள் ஏகமனதாகத் தெரிந்தெடுக்கப்பட்டார். உபதலைவர்: பாஜா, செயலாளர், பழனி, பொருளாளர்: ஏ. எம். உமர்தீன் ஆகியோர் தெரிந்தெடுக்கப்பட்டனர். கமிட்டி அங்கத்தவர்களாக கே. கந்தசாமி, பி. கந்தையா, யூசுப் றபாய், கே. சின்னத்துரை, ராஜு, ஆரிப் ஆசியோர் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

பீடித் தொழிற்சாலைக் கமிட்டிப் பிரதிநிதியாக எஸ். பத்மநாதன், றபாய, ராஜு, ஜுசுப், உமர்தீன், பி.சி.யூசுப், ஆ. ராஜு ஆகியோர்கள் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

## தொழிலாளர் நலனுக்காகப் போராட்டம்

அட்டன் மாவட்டத்தைச் சேர்ந்த சாமிமலைப் பகுதியிலிருக்கும் கவரவலைத் தோட்டத் தொழிலாளர்கள் தோட்டத் துரையினதும், சின்னையா கண்டாக்கினதும் அட்டகாசத்தையும் அநியாயத்தையும் எதிர்த்து செங்கொடிச் சங்கத்தைக் கட்டி வளர்த்து வருகின்றனர். செங்கொடிச் சங்கத்தின் அட்டன் கிளையின் வேண்டுகோளுக்கிணங்க அட்டன் தொழில் அதிபர் இத்தோட்டப் பிரச்சினைகளைப் பேசி பரிகாரம் தேடுவதற்காக ஒரு மாநாடு கூட்டியுள்ளார்.

அட்டன் பகுதி விளாத்தாஸ்கொடைத் தோட்டத்தில் ஒரு கவாத்து தொழிலாளி வேலைக்கு வரும்போது கங்காணிகளுக்கு முன்னுல் புகைபிடித்தார் என்ற காரணத்திற்காக அவருக்கு வேலை மறுத்ததை ஆட்சேபித்து கவாத்துத் தொழிலாளர்கள் வேலை செய்ய மறுத்துவிட்டனர். இது சம்பந்தமாக செங்கொடிச் சங்கம் நடவடிக்கையெடுத்து வருகின்றது.

## அப்புத்தளையில் உங்கள் காரியாலயம்

இலங்கைத் தோட்டத் தொழிலாளர்(செங்கொடி) சங்கத்தில் அப்புத்தளை மாவட்ட புதிய காரியாலயம் கீழ்க்காணும் முகவரியில் உள்ளதென்பதை அப்புத்தளை மாவட்டத் தொழிலாளர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிருேம்.

கரவைக் கந்தசாமி.
ஊவா மாகாண
பொதுப்பிரதிநிதி,
82, மெயின் வீதி,
அப்புத்தளை.

ஆசிரியர் கடிதம்

## தொழிலாளரின் அவதி

அன்புள்ள தோழர்,

வெள்ளைக்காரர் களிடமிருந்து தோட்டங்கள் கைமாறுவதால் அப்பாவித் தொழிலாளர்கள் அவமதிப்புக்கும் தாக்குதலுக்கும் ஈடுகொடுக்க முடியாது. தினம் தினமும் துன்புறுத்தி தாக்கப்பட்டுவருகிறார்கள். தர்மகர்த்தாவும் பிரபல யூ. என். பி.க்காரருமான ஜனுப் மீகூன் ஹாஜியாரின் தோட்டமான வாரிய பொலே, வேருகாமம் கன்தே நுவரை ஆகிய தோட்டங்களில் நிரபராதிகளான தொழிலாளர்கள் தனியே வரும் போது தோட்ட நிர்வாகத்தின் தூண்டுதலின் பெயரில் காவற்காரர்களால் நையப்புடைக்கப்பட்டு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு வைத்திய உதவி பெற்றுவருகிறார்கள்.

தோட்ட முதலாளியிடம் முறையிட்டால் பார்ப்போம்! விசாரிப் போம்!! என்று மழுப்பி வருகிறார். வேருகாக் தோட்டத்தில் இதுவரை ஒன்பது தொழிலாளர்கள் தாக்கப்பட்டு நையப்புடைக்கப் பட்டார்கள்.

தாக்கப்பட்டதொழிலாளர்களை திருப்திப்படுத்தவே தோட்ட கண்டக்டர் இலகுவான வேலை கொடுத்து ஏமாற்றி வருகிறார். காவற்காரர்களின் கடமை என்ன என்று கூட தெரியாத காட்டுமிராண்டிகளைக் காவலுக்கு நியமித்து தொழிலாளிகளைப் பழிவாங்குகிறார்கள். திருடர்களைப் பிடிப்பது அவர்கள் கடமையல்ல. தொழிலாளர்களை நையப் புடைத்து சேவைக் காலத்தை குறைத்துத் தோட்டத்தை விட்டு வெளியேற்றவே மறைமுகமான திட்டம் தோட்ட முதலாளியிடமுண்டு எனத் தெரிகின்றது.

புதுத் தொழிலா ளிகளை நிறையத் தோட்டத்தில் வேலைக்கு அமர்த்துவதிலிருந்து இது தெரிய வருகின்றது. பழைய தொழிலாளர்களுக்கு சேர வேண்டிய பென்சன், சேவைக் காலம் இவைகளை இல்லாமல் செய்யவே இம் மாதிரி திறைமறைவில் திட்டம் வகுத்துச் செயல்பட்டு வருகிறார்கள். இதற்குத் துணையாக தோட்டக் கண்டெக்டரும் காவற்காரர்களுக்குச் செயல் படுகின்றார்கள். இத் தோட்டத்தில் ல. தொ. யூ, இ, தொ, கா. ஆகிய சங்கங்களுண்டு. தாக்கப்பட்டவர்கள் இ. தொ. கா,வை சேர்ந்தவர்களே என்பது குறிப்பிடத்தக்கது.

திருடினுல் பிடிப்பது காவற்காரரின் கடமை. வழியில் தனியே வந்தால் அவசரமாகக் கடைக்குச் சென்று திரும்பினுல், விருந்தாளியாக வெளியிலிருந்து வந்தால் இதுபோன்ற காரணங்களுக்காகத் தொழிலாளர்களை அடித்து நொருக்கி விரட்டிவிடுகிறார்கள். பல முறை நிர்வாகத்தினருக்கு முறையிட்டு நடவடிக்கை எடுக்காது மௌனியாகியிருக்கிறார். பிரபல சமூக நல விரும்பி பணத்தினுல் எதையும் செய்யலாம் என்று வாளா விருக்கின்றார்கள் போலும்? சம்பந்தப்பட்ட சங்கங்கள் நடவடிக்கை எடுக்குமா?

"சமூகத் தொண்டன்" மாத்தளை.

# தொழிலாள வர்க்கத்தின் கீர்த்திமிகு சாதனை

## பாரிஸ் கம்யூன் படிப்பினைகள்

"உலகில் முதல் தடவையாக தொழிலாளி வர்க்கம் ஆட்சியைக் கைப்பற்ற முயன்றது பாரீஸ் கம்யூன் ஏற்பட்ட போதுதான் என்று, பாரீஸ் கம்யூன் ஞாபகார்த்த கூட்டத்தில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய அமைப்பாளர் தோழர் நா. சண்முகதாசன், தொ்பொழிவாற்றுகையில் குறிப்பிட்டார். "இக் கம்யூன் ஆட்சி 72 நாள் நீடித்தது. இந்த வீரமிக்க நாட்களில், தனது குறைபாடுகள் ஒருபுறமிருக்க, தனது சாதனைகளினுல் சரித்திரத்தில் இடம் பெற்றுள்ளது.

"இக் காலகட்டத்தில் உயிர் வாழ்ந்த மார்க்ஸ் இக் கம்யூனின் அனுபவங்களை அலசி ஆராய்ந்து, தொழிலாளி வர்க்கத்திற்கு வேண்டிய பல படிப்பினைகளை வரையறுத்துக் கொண்டார்.

கம்யூன் செயல்பட்ட 72 நாட்களுள், நிரந்தரமான இராணுவம் கலைக்கப்பட்டது, அதன் நிர்வாகிகள் யாவரும் தேர்ந்தெடுக்கப்பட்டு அரசாங்க சேவையில் உள்ளவர் எவரும், ஒரு சாதாரண தொழிலாளியின் சம்பளத்தை விட உயர்ந்த சம்பளம் எடுக்கக் கூடாதென உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அரசாங்கத் திற்கும், கோவில்கட்கும் இருந்த பிணைப்பு அகற்றப்பட்டது. வட்டிக் கடைகள் மூடப்பட்டன.

"இவை கம்யூன் காலத்து குறிப்பிடத்தக்க சாதனைகள். ஆனுல் கம்யூன் மிக முக்கிய அம்சம் என்ன வென்றுல், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் முதல் அனுபவம் இதுவே. இங்குதான் முதல் தடவையாக தொழிலாளி வர்க்கம், முதலாளி வர்க்க அரசு யந்திரத்தை உடைத்து அதன் சார்பில் தனது வர்க்கத்தின் அரசை ஸ்தாபித்தது. கம்யூன் கண்ட அனுபவத்தின் மூலம்தான், தொழிலாளி வர்க்கம் தயாராகவுள்ள முதலாளித்துவ அரசைக் கைப்பற்றி செயல்படமுடியாதென்றும், தொழிலாளி வர்க்க சர்வாதிகாரம், இராணுவ முதலாளித்துவ அரசை ஒழித்துக்கட்ட வேண்டுமென, மார்க்ஸ்ஸும், ஏங்கெல்ஸும் முடிவுகட்டினர். இது எவ்வளவு முக்கியமான பிரச்சினை என மார்க்ஸ் கருதினர். கம்யூனிஸ்ட் அறிக்கையில் அவர் ஏற்படுத்திய ஒரே ஒரு திருத்தம் இது.

கம்யூன் ஒரு பாராளுமன்றமல்ல, ஓர் செயலாற்றும் கூட்டுத்தாபனம். சட்டமியற்றும், செயலாற்றும் இரு கடமைகளையும் கொண்டதென மார்க்ஸ் குறிப்பிடுகிருர். "மூன்று அல்லது ஆறு வருடங்களுக்கொருதடவை, ஆளும் வர்க்கத்தின் எந்தப் பிரதிநிதி பாராமன்றத்திலிருந்து மக்களைச் சுரண்டுவது என்பதைத் தீர்மானிப்பதற்கு மாருக சர்வஜன வாக்குரிமை, மக்களுக்குச் சேவை செய்யவே கம்யூன்கள் மூலம் அணிதிரட்டப்பட்டு, அவசியமான தொழிலாளர்களை ஓவசியர்கள், கணக்கப்பிள்ளைகள் ஆகிய மற்றும் பலரை தயார் செய்தல் ஆகும்" இதுவே இப் பிரச்சினையில் மார்க்ஸின் கண்ணேட்டம்.

பாரீஸ் கம்யூன் பாரீஸ் தொழிலாளி வர்க்கத்தின் கீர்த்தி மிகு சாதனையாகும். அது இரத்தத்தில் மூழ்கடிக்கப் பட்டாலும், தொழிலாளி வர்க்க இயக்கத்திற்கு அது பல நல்ல பாடங்களைத் தந்துள்ளது. இதில் மிக முக்கியமான பாடம், தொழிலாளி வர்க்கம் ஆட்சியைக் கைப்பற்றுவதானுல், முதலாளித்துவ அரசு இயந்திரத்தை உடைத்தெறிந்து அதனிடத்தில் தனது புதிய அரசு யந்திரத்தை ஏற்படுத்த வேண்டும். பாராளுமன்ற மாயையில் மயங்கித் திரியக் கூடாது என்பதே, எனத் தோழர் சண்முகதாசன் கூறி முடித்தார்.

### பிழைதிருத்தம்

'தொழிலாளி' 23-2.64 இதழில் வெளியான விவேகானந்த வித்தியாலயம் பற்றிய கட்டுரையில் கலம் 1, பந்தி 2-ல் 1961-ம் ஆண்டிக்குப் பின் என்று இருக்கவேண்டியது தவறுதலாக 1952-ம் ஆண்டுக்குப்பின் என்று பிரசுரிக்கப்பட்டு விட்டது தவறுக்கு வருந்துகிறோம். ஆசிரியர்

## அரசியல் வியாபாரிகள் பட்ட அவஸ்தை!

—6-ம் பக்கத் தொடர்

நாங்கள் எவ்வளவு நேரம் காத்திருப்பது? என்று வினவின. கண்டக்டர் அமைதியான குரலில், நான் ஒவ்வொருவராக டிக்கட் கொடுத்துக்கொண்டுதானே வருகிறேன். நீங்கள் இறங்குமுன் டிக்கட் தந்தால் சரிதானே. குஞ்சுக்கு போலிக் கோபம். "ஆ; கட்ட வாகன டிக்கட் திப்பாங்.'' (வாயை மூடிக் கொண்டு டிக்கட்டைத் தா) என்று பணத்தை வீசியது. கண்டக்டர் அப்போதும் பொறுமையுடன் டிக்கட்டைக் கொடுத்தான். சிவப்புத் தொப்பி போட்டிருந்த ஒரு குஞ்சு: அதற்கு ஒரே குதூகலம். தொழிலாளி வர்க்கத்தின் ஏகப் பிரதிநிதி தான் தான் என்ற கர்வம் போலும் தொழிலாளியை முறைத்துப் பார்த்தது. பின் தலைக் குஞ்சைப் பார்த்து "இந்த ஊர் வலத்தில் நாங்கள் ஆயிரக் கணக்கான பொலிசாரைப் பார்த்தும் பயப்பட வில்லை. இந்தக் கண்டக்டருக்கா பயப்படுவது,'' தலைக் குஞ்சு தலையாட்டி ஆமோதித்தது.

பொறுத்திருந்த தொழிலாளி பொங்கியெழுந்தான். கண்டக்டர் சொன்னுன், "மேக்கதே தமுசலாகே கம்கறு வியாபாரய; அப்பே இல்லீம் வெனுவீன் ரஸ்லிமட்டயாவாரம் கறண்ட சியமினுசு, அபி ரஜகாரிய கொறனவிட்டசல்லி நொதி அப்பட பணிவை. உம்ப தெனகணி, தமுசெலா கோனயோ வென்ட புளுவனி. மம நியம வெடகறன கம்கறுவெக். மட்டமே செல்லம தாண்டெட்ப,'' (இதுதான உங்கள் தொழிற்சங்க வியாபாரம். எமது கோரிக்கைகளுக்காக நடந்த எமது கூட்டத்தில் வியாபாரம் செய்ய போனவர்கள். நாம் எமது கடமையைச் செய்ய வந்தால், பணம் கொடுக்காமல் பாசாங்கு செய்துவிட்டு, எம்மையா திட்டுகிறீர்கள். நீ கவனித்துக்கொள். நீங்கள் வால்பிடிகளாக இருக்கலாம். நான் தொழில் செய்யும் உண்மையான தொழிலாளி. என் மூடம் வாலாட்டாதே.)

குஞ்சுகளுக்கு மூச்சில்லை. பேச்சில்லை. பஸ் நின்றது. குஞ்சுகளைப் பார்த்தேன் காணவில்லை. எங்குதான் ஒடி மறைந்தனவோ!

வாசியுங்கள்...!

யுவசக்தி மார்ச் மாத இதழ்

மாணவர்களான விஞ்ஞானக் கட்டுரை இடம் பெறுகின்றது!

# மாஸ்கோவில் அமெரிக்க பூனை!

மாஸ்கோவிலுள்ள அமெரிக்க ஸ்தானிகர் பனிமலைப் பதுமையாக இருந்தது ஓர் பூனை. ஸ்தானிகர் தாயகம் சென்றதும், அவரது படுக்கையில் தனியாக இருக்கமுடியாது என்ற காரணத்தினுல் பூனைக்குத் துணையாக ஒரு அமெரிக்கர் காவலுக்கு விடப்பட்டார். ஆனுல் பூனையோ தப்பி ஓடிவிட்டது. மாஸ்கோ முழுதும் ஒரே பரபரப்பு.

திரிபுவாதிகளுக்கு அமெரிக்கப் பூனை காணுமல்போனது பெரும் குறையாகப் போயிற்று. மாஸ்கோ போலிசார் வீதிகளெங்கும் தேட ஆரம்பித்தனர். ஸ்தானிகராலயங்களின் டஜன் கணக்கான வாகனங்கள், மாஸ்கோ போலிஸ் படையுடன் பூனையைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டன.

மாஸ்கோவின் வாகனச் சட்டங்களுக்கு மாருக, வாகனங்கள் யாவும் வெளிச்சங்களைப் பரப்பிக்கொண்டு நகரமெங்கும் ஒரே கலவரப் பட்டன. மாஸ்கோ போலிசார், பூங்காக்கள், பூராவும் சோதனையிட்டனர். மாஸ்கோவின் இரகசியப் போலிசாரும் பூனையைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டனர். நகரிலுள்ள பூனைகள் யாவும் அணிவகுப்பில் நிறுத்தப்பட்டன. ஆனுல் அமெரிக்கப் பூனையைக் காணவில்லை.

இரவுமுழுதும் தேடித்திரிந்து காலை 2 மணியளவில் ஓர் போலிஸ் அதிகாரி, இரண்டாவது உலக யுத்தத்தில் வெற்றி பெற்ற படைத் தளபதியைப் போல் பூனையும் கையுமாக வந்து சேர்ந்தார். பூனையைப் பிடித்துவிட்டோமென்ற மகிழ்ச்சி. அது பிராண்டி, இரத்தம் வழிவதைக்கூடக் கவனிக்கவில்லை.

ஏகாதிபத்தியத்தின் ஏகச் சக்ரவர்த்தி கெனடியின் மரணத்திற்குக் கண்ணீர் வடித்தவர்கள் ஒரு அமெரிக்கப் பூனைக்காக மாஸ்கோ நகரையே ஒர் கலக்குக் கலக்கியது ஆச்சரியமில்லை.

மாமேதை லெனின் தலைமையில் உலகில் முதல் முறையாக வீரச் சமர் புரிந்து தொழிலாளி வர்க்க ஆட்சியை ஏற்படுத்திய நாட்டில் திரிபுவாதிகளின் நடவடிக்கைகளைக் கண்டும் கேட்டும் மனம் வெதும்பாதவர்களில்லை. என்றுதான் ஒழியுமோ இந்த சாபக்கேடு.

பதிப்பித்து வெளியிடுபவர்: அசன் மொகிதீன் பக்கீர் மொஹிதீன், 123, யூனியன் பிளேஸ், கொழும்பு-2. அச்சிட்டது: தொழிலாளி அச்சகம், 9, டிமெல் வீதி கொழும்பு-2.